விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 32 சனிக்கிழமை (17.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

## யாழ் வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட

# மக்களின் காணியை விடுவிக்க

# 1200 மில்லியன் ரூபாய் தேவை

### அரசு தரவில்லை என பிரதமரிடம் இராணுவம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட ஒரு பகுதி காணியை விடுவிப்பதற்கு 1200 மில்லியன் ரூபாய் பணம் தேவைப்படுகிறது. எனினும் இந்தப் பணத்தை அரசாங்கம் கொடுக்கவில்லை என பிரதமர் முன்னிலையில் இராணுவ அதிகாரி தெரிவிப்பு. (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய தூதுவராக

சரா ஹூல்ரன் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய தூதுவராக சரா ஹூல்ரன் அம்மையார் நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, இலங்கைக்கான பிரித் ▷23

தீக்காயத்துக்குள்ளான

## குடும்பப் பெண் உயிரிழப்பு

(புதுக்குடியிருப்பு)

தீக்காயத்துக்குள்ளான குடும்பத் தலைவி ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இதில் லேனாவில் புதுக்குடி ▷23

## பலாலி விமான நிலையத்திற்காக மேலதிக காணிகளை சுவீகரிக்க அனுமதிக்க முடியாது

### பிரதமரிடம் மாவை எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதை விஸ்தரிப்பின் போது மேலதிக காணிகளை சுவீகரிக்க அனுமதிக்க முடியாது என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ▷23

## நாகர்கோவில் சரணாலயத்திற்கான வர்த்தமானி அறிவிப்பு தவறு

### ஒப்புக்கொண்டது வனஜீவராசிகள் திணைக்களம் உடன் நீக்குமாறு பிரதமர் ரணில் உத்தரவு

(கொழும்பு)

நாகர்கோவில் பறவைகள் சரணாலயத்திற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் முறையற்று வெளியிடப்பட்டது என்பதை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி நேற்று யாழ் மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டார். இதையடுத்து, அந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுமாறு பிரதமர் ரணில் உத்தரவிட்டார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திப் பணிகள் குறித்த மீளாய் ▷23

ஒரு கோடி பெறுமதியான

## ஐஸ் ரக போதை மன்னாரில் மீட்பு



▷23

## யாழில் தனியார் காணிகளை கொள்வனவு செய்து முஸ்லிம்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வசிக்கும் முஸ்லிம்களை மீள்குடியமர்த்துவதற்கான வீட்டுத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்திலே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கேட்டுக் கொண்டதை யடுத்தே இவ்வனுமதி வழங்கப்பட்டது. இதற்கெனத் தனியார் காணிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதுடன், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கீழான நீண்ட கால இடம் பெயர்ந்தோரை மீள்குடியேற்றும் அமைச்சு நிதிகளையும் ஒதுக்கவுள்ளது.

சொந்த இடங்களில் மீளக் குடியமர விருப்புடைய மக்கள் அடிக்கடி பதிவுகளை மேற்கொண்ட போதிலும் அரச காணிகள் கிடைக்காததால், அலைக்கழிவது ▷23

## தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் 2ஆவது தலைவரின் மகன் கைது

(கொழும்பு)

தடைசெய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கத்தின் 2 ஆவது தலைவரது மகன் அம்பாறை புலனாய்வு பிரி ▷23

காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான

## பிராந்திய அலுவலகம் யாழில் திறக்கப்படுகின்றது

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்திலும் திறக்கப்படவுள்ளது.

இம்மாதம் 24ம் திகதி யாழில் ஆடியபாதம் வீதியில் அலுவலகம் திறக்கப்படவுள்ளது. இதில் ▷23

## விடுவிக்கப்படாமல் இருக்கும் தனியார் காணிகள் தொடர்பில்

### யாழ் வரும் ஜனாதிபதியிடம் தெரிவிப்பேன் ; ஆளுநர் ராகவன்

(யாழ்ப்பாணம்)



யாழில் விடுவிக்கப்படாமல் இருக்கும் தனியார் காணிகள் தொடர்பில் யாழ் வரும் ஜனாதிபதியிடம் தெரிவிப்பேன் என ▷23

பஸ்ஸில் நகை களவாடிய பெண்கள்

## ஆட்டோவில் சென்ற வேளை சாரதியின் சாதுரியத்தால் கைது

### மருதனார் மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் காங்கேசன்துறை வீதியாகச்சென்ற பயணிகள் பஸ்ஸில் திருடிய நகைகளுடன் ஆட்டோவில் பயணித்த 3 பெண்கள் ஆட்டோச் சாரதியின் சாமர்த்தியத்தால் கைது செய்யப்பட்டு சுன்னாக பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, யாழில் ▷23

## பலாலியிலிருந்து சர்வதேச விமானசேவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையம் தொடர்பான விசேட கலந்துரையாடல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம் பெற்றது. பலாலி விமான நிலையத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பலாலியிலிருந்து சர்வதேச விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. வரும் செப்டெம்பரில் அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் ஒக்ரோபரில் விமான சேவைகளை ஆரம்பிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சிவில் விமானப் போக்கு ▷23

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குதோற்றியோருக்கான விசேட வகுப்புகள்!**

ENGLISH — Reading, Writing, Speaking, Listening — Skills

**By : Mr.P.T.KUMARAN**
(P.MATHAN)

ஆங்கில மொழி மூலத்தில் கற்க விரும்புபவர்களுக்கான

MATHS / SCIENCE
- தயார் படுத்தல் வகுப்புக்கள்
- ஆங்கில மொழிமூல சொற்பிரயோக அறிமுகம்

MATHS : By : P.T.KUMARAN (P.MATHAN)
SCIENCE : By : R.MOHAN

ஆரம்பம் : 19.08.2019 திங்கட்கிழமை காலை 10.00 மணி

**NEWTON GROUP CLASSES**
18/18, வைமன் வீதி, நல்லூர்.
(9921) 077 792 3653


# முச்சுத்திணறலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

## நெல்லியடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மூச்சுத்திணறலினால் சுவிஸ்லாந்தைச் சேர்ந்த இலங்கையர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று யாழ் போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் மூத்தவிநாயகர் கோவிலடி நெல்லியடியைச் சேர்ந்த கதிரவேலு தவநாயகம் (வயது - 62) என்ற வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையரே உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை உறக்கத்தின்போது மூச்சுத்திணறல்,ஏற்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

# வறட்சியால் 7 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வறட்சியுடனான வானிலையால் 6,82,000 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியினால் வட மாகாணத்தில் மாத்திரம் 2,28,000இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)


**வீடு வாடகைக்கு உண்டு**

இருபாலைச் சந்திக்கு அருகில் பெரிய வீடு ஒன்று (அனெக்ஸ் முறையில்) வாடகைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3 மணிக்கு பின்னர் வீட்டைப் பார்வையிட முடியும்.

தொடர்பு:
0776114068
0772414068



**V2 TRAVELS**




வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

**VISA EXTENSION**
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499 (C-7286)

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



**காணி விற்பனை**

யாழ் நகர் கொன்வென்ட் வீதியில் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) 2 1/3 பரப்பு காணி விற்பனைக்கு. (இடைத் தரகர்கள் தேவையில்லை.) (9930)

தொடர்பு : 077 086 9328


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் அங்கத்தவரும் மருத்துவ உத்தியோகத்தர் இலவச சித்த மருந்தகம், ஆனைக்கோட்டை பிரதேச சபை **Dr.சுதர்மன் அருள்மொழி** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பரமேஸ்வரி ஆனந்தராசா**

அவர்களின் பிரிவுத் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் இலங்கை**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி ஆனந்தராசா



(ஓய்வுபெற்ற உப அதிபர் - யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரி)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய், ஊரெழு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஆனந்தராசா அவர்கள் நேற்று (16.08.2019) வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் இளைப்பாறிய அதிபர் க.ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்களின் பாசமிகு மனைவியும் அருள்மொழி (சித்த மருத்துவ உத்தியோகத்தர் - மானிப்பாய் பிரதேச சபை), கோகுலன் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், வேலணை), கனிமொழி (விஞ்ஞான ஆசிரியர் - யா/ இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), அர்ச்சனா (மருத்துவபீடம் 35ம் அணி, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதர்மன் (சித்த மருத்துவ உத்தியோகத்தர் யாழ் மாநகர சபை), எழிலினி (சித்த வைத்திய உத்தியோகத்தர், மத்திய சித்த மருந்தகம் வேலணை), சிவரூபன் (பொறுப்பதிகாரி, வலிகிழக்கு பிரதேச சபை உப அலுவலகம் உரும்பிராய்), நிரோஷன் (மருத்துவபீடம் 35ம் அணி, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும் அனிருத்தன், அட்சயா, அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.08.2019) வெள்ளிக்கிழமை ஊரெழு கிழக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:- குடும்பத்தினர்
021 224 4343


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர் உழவன் முத்துவேல் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 17.08.2019 சனிக்கிழமை தொடக்கம் 23.08.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள்: மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்
துணைப் பேராசிரியர் த.நந்தகுமாரன்

அகத்தாய்வு 1ம் நிலை 17.08.2019 சனிக்கிழமை மற்றும் 18.08.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 2772



**சர்வதேச இந்து இளைஞர் பேரவை**

நடாத்தும்

**இந்து மாநாடும் முத்தமிழ் சங்கமமும் - 2019**

இடம் : கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபம்
காலம் : 18.08.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 மணி முதல்






ஆன்மீக ஊர்வலம்: கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து விழா மண்டபம் வரை

அருளுரைகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள், சிறப்புரைகள், எழுச்சிக் கருத்தரங்கு, சிறப்புப் பட்டிமண்டபம், கவியரங்கம், கலை நிகழ்வுகள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-7300) சர்வதேச இந்து இளைஞர் பேரவை - இலங்கை

# மதத்தலைவர்கள் கூட முன்னுதாரணமாக இல்லை



## ➢மனிதர்கள் பணம் ஈட்டுவதில் தான் அதிக அக்கறை
## ➢சுயநலமான சூழல் உருவாக்கம்-கர்தினால் கவலை

(கொழும்பு)

**மத வாழ்க்கை மீதான நாட்டம் தற்போது பலவீனமடைந்து வருகின்றது. மனிதர்கள் பணம் ஈட்டுவதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றனர் எனச் சுட்டிக்காட்டிய பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, மதத்தலைவர்கள் கூட முன்னு தாரணமாக இல்லை எனவும் கவலை வெளியிட்டார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத வாழ்க்கை மீதான நாட்டம் தற்போது பலவீனமடைந்து வருகின்றது. மதத் தலைவர்கள் கூட முன்னுதாரணமாக இல்லை. மதத் தலைவர்கள் மட்டுமன்றி சமூகத்தில் பல விடயங்கள் மோசமடைந்துள்ளன.

சுயநலமான சூழல் ஒன்று தற்போது உருவாகியுள்ளது. தற்போதைய மனிதர்கள் பணம் ஈட்டுவதில் தான் அதிக அக்கறை காட்டுகின்றனர். இதனால், நாட்டினுள் குற்றங்கள் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாக அனைவரும் தமக்கான கடமைகளை தாய்மையான அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளுமாறும், பணம் அல்லது அரசியல் அதிகாரத்தை எதிர்பார்த்து செயற்படக் கூடாது எனவும் கர்தினால் கோரிக்கை விடுத்தார். (இ-7)

---

# சஜித்-கோத்தபாயவை இணைய மோதலில் சிக்க வைக்க முயற்சி



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக மோதுவார்கள் என எதிர்பார்க்கப்படும் கோத்தபாய ராஜபக்ஷவையும், சஜித் பிரேமதாஸவையும், இணைய மோதலுக்குள் சிக்க வைத்துள்ளனர் இணையத்தள முடக்கிகள்.

சஜித் பிரேமதாஸவின் பெயரில் உள்ள, **www.sajithpremadasa.com** என்ற இணையத் தளத்துக்குள் நுழைவோர், கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரில் உள்ள, **www.gota.lk** என்ற இணையத்தளத்துக்கு தானாகவே கொண்டு செல்லப்படுகிறார்கள்.

அதுபோல, கோத்தபாய ராஜபக்ஷவுக்கா்க பரப்புரைகள் செய்யப்படும், **gotabayarajapakse.com** என்ற இணையத்தளத்துக்குள் நுழைவோர், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான **http://www.prisons.gov.lk** இற்குள் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இணையத்தள முடக்கிகளின் இந்த சதி வேலை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், **www.sajithpremadasa.com** என்ற இணையத்தளம் தங்களால் இயக்கப்படவில்லை என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த தளத்துடன் எங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை, என்ன நடந்தது என்பது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது. இருப்பினும், நாங்கள் விரைவில் ஒரு புதிய அதிகாரபூர்வ தளத்தைத் தொடங்கவுள்ளோம் என்று அவர் கூறினார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் விபரக்குறிப்பில் இது தாக்கத்தை ஏற்படுத்துவதால் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரில் உள்ள இணையத் தளத்துக்குள் நுழைவோர், சிறைச்சாலைத் திணைக்களத்தின் வலைத்தளத்துக்குள் அனுப்பப்படுவது குறித்து கோத்தபாய ராஜபக்ஷ தரப்பின் கருத்து உடனடியாக வெளியாகவில்லை. (இ-7)

---

## "கோத்தாவுக்கு எதிராக பெரமுனவில் சதி"

# சுதந்திரக்கட்சி கூட்டணிக்காக ஒருபோதும் மகிந்த அணியிடம் மண்டியிடப்போவதில்லை

## வீரகுமார வீரவசனம்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோத்தபாயவை தோற்கடிப்பதற்காக அக்கட்சிக்குள் குழுவொன்று சதி செய்து வருவதாக சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணிக்காக ஒருபோதும் பொதுஜன பெரமுனவிடம் மண்டியிடப் போவதில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாவுக்கு சிறுபான்மையினரின் வாக்குகள் கிடைக்காத வகையில் சிலர் செயற்படுகின்றனர்.

நாட்டின் தற்போதைய அரசியலில் உச்சத்தில் இருப்பவர்கள் இன்னும் ஓரிரு மாதங்களில் வீழ்ச்சியடைய வேண்டிய நிலை ஏற்படும்.

பொதுஜன பெரமுனவுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளின் போது எமது வேலைத்திட்டத்திற்கு அவர்கள் ஒத்துழைத்தால் மாத்திரமே கூட்டணியமைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# சட்டவிரோதமாக ஆஸிக்கு சென்ற 13 இலங்கையர்கள் நாடு கடத்தல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகு மூலம் சென்ற 13 இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனர்.

குறித்த 13 பேரும் இலங்கைக்கு விசேட விமானம் மூலம் நாடு கடத்தப்பட்ட நிலையில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாடுகடத்தப்பட்ட அனைவரும் ஆண்கள் எனவும் அவர்கள் சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர்களெனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

நாடுகடத்தப்பட்ட 13 பேரும் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை விசேட விமானத்தின் மூலம் அவுஸ்திரேலிய பொலிஸாரின் பாதுகாப்பில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட 13 பேரும் விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைக்காக குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# அடுத்துவரும் ஓரிரு வாரத்திற்குள் ஐ.தே.க.மூன்றாக உடைந்து விடும்

## லக்ஷ்மன் யாப்பா எதிர்பார்ப்பு

(கொழும்பு)

அடுத்து வரும் ஓரிரு வாரத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சி மூன்றாக உடைந்து விடும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்லக்ஷ்மன்யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் ரணில் குழு, அமைச்சர் சஜித் குழு மற்றும் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ளும் குழு என ஐ.தே.க. மூன்றாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் தனது ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்து கொள்ள முடியாது தடுமாறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நியூசிலாந்து அணி தடுமாற்றம்

இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின், மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதற்கமைய நேற்றைய ஆட்டநேர முடிவில், இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் நியூஸிலாந்து அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 195 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்ட நேரமுடிவில் வில்லியம் சோமர்வில்லே 5 ஓட்டங்களுடனும், வாட்லிங் 63 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

அத்தோடு நியூஸிலாந்து அணி, 177 ஓட்டங்கள் முன்னிலையிலும் உள்ளது.

இரு அணிகளினதும் சர்வதேச டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதல் தொடராக அமைந்த இத்தொடரின் முதல் போட்டி, காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமானது.

எதிர்பார்ப்பு நிறைந்த இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

மழையின் மந்தமான போக்குடன் ஆரம்பித்த இப்போட்டியில், நியூஸிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 249 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.



இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ரோஸ் டெய்லர் 86 ஓட்டங்களையும், ஹென்றி நிக்கோல்ஸ் 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சு சார்பில், அகில தனஞ்சய 5 விக்கெட்டுகளையும், சுரங்க லக்மால் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, 267 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக நிரோஷன் டிக்வெல்ல 61 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 53 ஓட்டங்களையும், அஞ்சலோ மெத்தியூஸ் 50 ஓட்டங்களையும், சுரங்க லக்மால் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சு சார்பில், அஜாஸ் பட்டேல் 5 விக்கெட்டுகளையும், வில்லியம் சோமர்வில்லே 3 விக்கெட்டுகளையும், ட்ரெண்ட் போல்ட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

18 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவில், 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 195 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதன்போது நியூஸிலாந்து அணி சார்பில், ஜீட் ராவல் 4 ஓட்டங்களுடனும், டொம் லதம் 45 ஓட்டங்களுடனும், கேன் வில்லியம்சன் 4 ஓட்டங்களுடனும், ரோஸ் டெய்லர் 3 ஓட்டங்களுடனும், ஆட்டமிழந்தனர்.

மேலும், ஹென்றி நிக்கோல்ஸ் 26 ஓட்டங்களுடனும், மிட்செல் சான்ட்னர் 12 ஓட்டங்களுடனும், டிம் சவுத்தீ 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சு சார்பில், லசித் எம்புல்தெனிய 4 விக்கெட்டுகளையும், தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுகளையும் அகில தனஞ்சய 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இன்னமும் 3 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், நியூஸிலாந்து அணி போட்டியின் நான்காவது நாளை இன்று தொடங்கவுள்ளது.



# உச்சத்தைத் தொட்ட கோலி

10 ஆண்டுகளில் 20 ஆயிரம் ரன்னை தொட்ட முதல் வீரர் என்ற பெருமையை விராட் கோலி பெற்றுள்ளார். அவர் 2010 முதல் 2019-ம் ஆண்டு வரையிலான காலத்தில் 371 போட்டிகளில் 20 ஆயிரத்து 18 ரன் குவித்து உள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸ் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. அந்த அணிக்கு எதிரான ஒரு நாள் போட்டி தொடரில் (3 ஆட்டம்) இந்திய கேப்டன் விராட் கோலி தொடர்ந்து இரண்டு சதம் அடித்து அசத்தினார். 2-வது போட்டியில் 120 ரன்னும், 3-வது போட்டியில் 114 ரன்னும் எடுத்தார்.

இதன் மூலம் விராட் கோலி புதிய சாதனை படைத்தார். சர்வதேச கிரிக்கெட்டில் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் 20 ஓவர்) 10 ஆண்டு காலத்தில் 20 ஆயிரத்துக்கு மேல் ரன் குவித்து உள்ளார்.

10 ஆண்டுகளில் 20 ஆயிரம் ரன்னை தொட்ட முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். விராட் கோலி 2010 முதல் 2019-ம் ஆண்டு வரையிலான காலத்தில் 371 போட்டிகளில் 20 ஆயிரத்து 18 ரன் குவித்து உள்ளார். இதில் 67 சதங்கள் அடங்கும். அடுத்த இடத்தில் ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் ரிக்கி பாண்டிங் 18,962 ரன்களுடன் (2000- 2009-ம் ஆண்டு) உள்ளார்.

வெஸ்ட்இண்டீஸ் அணிக்கு எதிராக

சர்வதேச கிரிக்கெட்டில் (டெஸ்ட், ஒரு நாள் போட்டி, 20 ஓவர்)
10 ஆண்டுகளில் அதிக ரன் குவித்த முதல் 6 வீரர்கள் விவரம் வருமாறு-

| வீரர் | நாடு | ஆண்டு | போட்டி | ரன் | சதம் |
|---|---|---|---|---|---|
| விராட் கோலி | இந்தியா | 2010-19 | 371 | 20,018 | 67 |
| ரிக்கி பாண்டிங் | ஆஸ்திரேலியா | 2000-09 | 363 | 18,962 | 55 |
| காலிஸ் | தென் ஆப்பிரிக்கா | 2000-09 | 329 | 16,777 | 38 |
| ஜெயவர்த்தனே | இலங்கை | 2000-09 | 393 | 16,304 | 34 |
| சங்ககரா | இலங்கை | 2009-09 | 379 | 15,999 | 31 |
| தெண்டுல்கர் | இந்தியா | 2000-09 | 301 | 15,962 | 42 |


கோலி 9-வது சதத்தை பதிவு செய்தார். இதன் மூலம் ஒரு நாள் போட்டிகளில் ஒரு அணிக்கு எதிராக அதிக சதம் அடித்த டெண்டுல்கரின் சாதனையை சமன் செய்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டெண்டுல்கர் 9 சதம் அடித்து உள்ளார்.

வெஸ்ட்இண்டீஸ் மண்ணில் ஒரு நாள் போட்டியில் தொடர்ந்து 3 சதம் அடித்த முதல் வீரர், 4 சதம் அடித்த முதல் வெளிநாட்டு வீரர் என்ற சிறப்பையும் பெற்றார். மேலும் கேப்டனாக ஒரு அணிக்கு எதிராக அதிக சதம் உள்ளார். அவர் வெஸ்ட்இண்டீசுக்கு எதிராக 7 சதம் (14 இன்னிங்சை) அடித்து உள்ளார். 2-வது இடத்தில் 5 சதங்களுடன் ரிக்கி பாண்டிங் (நியூசிலாந்துக்கு எதிராக 34 இன்னிங்ஸ்) உள்ளார்.

ஒருநாள் போட்டியில் கேப்டனாக 21-வது (76 இன்னிங்ஸ்) சதத்தை பூர்த்தி உள்ளார். இதில் ரிக்கி பாண்டிங் 22 சதங்களுடன் (220 இன்னிங்ஸ்) முதல் இடத்தில் உள்ளார்.

ரன்னை சேசிங் செய்தபோது அதிக சதம் அடித்த வரும் கோலிதான். அவர் 26 சதங்களில் அடித்து உள்ளார். அடுத்த இடங்களில் தெண்டுல்கர் (17 சதங்கள்) ரோகித் சர்மா (13 சதம்) உள்ளனர்.

சேசிங்கின் போது கோலி அடித்த சதங்களில் (26) 22 ஆட்டத்தில் இந்தியா வென்று உள்ளது. அடுத்த இடத்தில் டென்டுல்கர் (14 ஆட்டம்) உள்ளார்.



## ரசல் ஆர்னல்ட் கவலை

தமிழகத்தை சேர்ந்த முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் விபி சந்திரசேகர் தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் அந்த செய்தி அதிர்ச்சியளிப்பதாக இலங்கை முன்னாள் வீரர் ஆர்னல்ட் கூறியுள்ளார்.

இந்திய அணிக்காக 1988-ம் ஆண்டு முதல் 1990-ம் ஆண்டு வரை 7 சர்வதேச போட்டிகளில் விளையாடி, 88 ஓட்டங்கள் எடுத்துள்ள சந்திரசேகர் தமிழக அணிக்காக முதல் தர கிரிக்கெட்டில் 4,999 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இதோடு டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரில் வி.பி.காஞ்சி வீரன்ஸ் அணியின் உரிமையாளராகவும் இருந்து வந்தார். இந்நிலையில் அவர் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அவர் இறப்புக்கு பலரும் இரங்கல் தெரிவித்துள்ள நிலையில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் ரசல் ஆர்னல்டும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அவரின் டுவிட்டர் பதிவில், சந்திரசேகர் இறப்பு செய்தி அதிர்ச்சியை கொடுக்கிறது.

அறிவாளியாகவும், நகைச்சுவை உணர்வு மிக்கவராகவும் அவர் இருந்தார்.


கடந்த திங்கட்கிழமை அன்று கூட டி.என்.பி.எல் போட்டியின் போது நாங்கள் இருவரும் சிரித்து பேசி கொண்டிருந்தோம், அவர் ஆத்மா சாந்தியடையட்டும் என பதிவிட்டுள்ளார்.

# இந்திய கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக மீண்டும் ரவி சாஸ்திரி தெரிவானார்

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக ரவி சாஸ்திரி மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ரவி சாஸ்திரியின் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து, புதிதாக தலைமை பயிற்சியாளரை தேர்வு செய்வதற்கான வேலையில் பிசிசிஐ களம் இறங்கியது.

இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. வரவேற்கப்பட்ட விண்ணப்பங்களை கபில்தேவ் தலைமையிலான தேர்வுக்குழு ஆய்வு செய்தது. பின்னர் ரவி சாஸ்திரி, மைக் ஹெஸ்சன், டாம் மூடி உட்பட 6 பேரின் இறுதி பட்டியலை தயாரித்தது. அவர்களிடம் நேற்று நேர்காணல் நடத்தியது.



இறுதியில் ரவிசாஸ்திரியை தலைமை பயிற்சியாளராக தேர்வு செய்துள்ளோம் என்று கபில்தேவ் தெரிவித்தார். ரவி சாஸ்திரி 2021 வரை தலைமை பயிற்சியாளராக இருப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் கிரிக்கெட் வீரர் சந்திரசேகர் காலமானார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் வி.பி. சந்திரசேகர் (57) சென்னையில் காலமானார்.

இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் வி.பி.சந்திரசேகர் (வயது 57) சென்னையில் காலமானார். அவர் மாரடைப்பு காரணமாக இறந்தாக முதலில் தகவல் வெளியானது. பின்னர் அவர் தனது வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்ததாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணிக்காக 7 போட்டிகளில் விளையாடியுள்ள சந்திரசேகர் தமிழ்நாடு அணி கேப்டனாக இருந்துள்ளார்.


1988 முதல் 1990 வரை இந்திய அணிக்காக 7 சர்வதேச போட்டிகளில் வி.பி. சந்திரசேகர் விளையாடியுள்ளார். கிரிக்கெட் வர்ணனையாளர், இந்திய அணி தேர்வு குழு தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

தமிழக ரஞ்சி அணியின் பயிற்சியாளராகவும் வி.பி. சந்திரசேகர் பதவி வகித்துள்ளார்.




# நடைமுறைக்கு சாத்தியமான கொள்கைத்திட்டம் அறிவிப்பு

## கோத்தபாய தெரிவிப்பு







**(திஸ்ஸமகாராம)**

**நாட்டின் நடைமுறைக்கு சாத்தியமான கொள்கை திட்டத்தை அறிவித்துள்ளேன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

திஸ்ஸமகாராமவிற்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் செய்திருந்தபோது ஆதரவாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ என்னை வேட்பாளராக அறிவித்த போது நாட்டின் எதிர்காலம் பற்றியும் நடைமுறைக்கு சாத்தியமான கொள்கைகளையும் குறிப்பிட்டிருந்தேன்.

அவை அனைத்தும் பிரயோசனமான வேலைத்திட்டங்களாகும்.

என்னை வரவேற்பதற்கு இங்கு வருகை தந்த உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கோத்தபாய மேலும் தெரிவித்தார். (இ-7)

# 1ம் ஆண்டு நினைவு நாள்

17.08.2019

ஆர்மோனிய வித்துவான், கலைஞான வாரிதி

**அமரர் ஆழ்வான் தங்கராசா**



அலைகடல் ஓயும்
கலைஞனுக்கேது ஓய்வு
உம் கலையால்
ஊரயே கட்டிப் போட்ட
ஓர் உன்னத கலைஞனுக்கு
அழிவென்பது ஏது?

(C-7294)

சிறிநாரதா வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

உம்மை என்றும் மறவாத... பிள்ளைகள்

# ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதே ஜே.வி.பிக்கு சிறந்தது

## விக்கிரமபாகு அறிவுரை



(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தைத் பாதுகாப்பதற்கான அணிகள் உள்ளன என்ற செய்தியை வெளிப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளரைப் பெயரிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

அத்துடன், இம்முறை இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பானது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அணிக்கு ஆதரவளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடாமல் ஒதுங்கியிருப்பதே மக்கள் விடுதலை முன்னணிக்கு சிறந்ததாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் விடுதலை முன்னணி முன்வர வேண்டும் என் றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

**17.08.2019**

ஆடி 32, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

துதியை முன்னிரவு 10.04 மணிவரை

சதயம் பிற்பகல் 2.12 மணிவரை

சுபநேரம் 3.05-4.35 மணிவரை

இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

வளவன்

கிரகநிலை: ராகு; சூரி, புத, சுக்; செவ்; குரு; சனி, கேது; சந்

சந்திராஷ்டமம்: ஆயிலியம், மகம்

**மேடம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், உடல்நலம் சீராகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெற்றோரின் நலனில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள்.

**மகரம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.




இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மருதடி ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். இந்தியத் துணைத் தூதுவராலயத்தில் இடம்பெற்றது. தேசியக் கொடியை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் ஏற்றி வைத்தார்.

# இந்திய துணைத்தூதரகத்தின் தெய்வீக சுகானுபவம்




(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவினை முன்னிட்டு யாழ்.இந்தியத் துணைத் தூதரகமானது இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் மற்றும் (ICCR) வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து தெய்வீக சுகானுபவம் - 8 நிகழ்வை வழமை போன்று இவ் வருடமும் 14,15 மற்றும் 16ஆம் திகதிகளில் நடத்தின.

கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் முனைவர் பரிமள் அசோக் பட்கேயின் பரதநாட்டிய பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்துமாலை நல்லூர் சங்கிலியன் தோப்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.சாக்ஸபோன் சகோதரர்களின் சாக்ஸபோன் இசை நிகழ்வும் அதனைத் தொடர்ந்து முனைவர் பரிமள் அசோக் பட்கேயின் நடனஅளிக்கையும் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியதுணைத் தூதுவர் பாலச்சந்திரன் கலந்து கொண்டார். மேலும் வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், வடமாகாண கலை பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் சுஜீவாசிவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-7)

# சின்மயாமிஷனில் ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

சின்மயா மிஷன் ஏற்பாட்டில் நல்லூர், 700, பருத்துறை வீதியில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் வளாகத்தில் சுவாமி சிதாகாசானந்தாவின் ஆன்மீக அருளுரை இன்றும் நாளையும் இடம்பெறும். இதில் இன்று 17 ஆம் திகதி சனிக்கிழமை "இலக்கைக் கொண்ட வாழ்வு" எனும் தலைப்பிலும் நாளை "இலக்கை இலக்கு வைப்போம்" எனும் தலைப்பிலும் இரவு 7.15 மணிக்கு அருளுரை இடம்பெறும். (இ-5)

# இணுவில் சிறுவர் வைத்தியசாலையின் நிர்மாணப்பணிகள் வருட இறுதிக்குள்

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் பகுதியில் அமையப் பெறவுள்ள அரச சிறுவர் வைத்தியசாலை நிர்மாணப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

மத்திய சுகாதார அமைச்சால் மூன்று வைத்தியசாலைகளுக்கு 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

குறித்த நிதியில் யாழ்.இணுவில் சிறுவர் வைத்தியசாலைக்கு 150 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# நீர்க்குழாய் பொருத்துவதற்கு உடைக்கப்பட்ட வீதி திருத்தப்படவில்லை என மக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிரதேச செயலகத்திற்குற்குட்பட்ட செந்தமிழ் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட வீதி நீர்க்குழாய் பொருத்துவதற்காக உடைக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் கடந்த 10 ஆம் திகதி பயனாளிகளிடம் கையளிக்கப்பட்ட 24 வீட்டுத்திட்டத்தில் உள்ள வீதியே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது.

அதாவது குறித்த வீட்டுத் திட்ட வீடுகளுக்கான குழாய் மூலம் நீர் எடுப்பதற்காக புதிதாகச் செப்பனிடப்பட்ட வீதி உடைக்கப்பட்டு நீர்க்குழாய் பொருத்திய பின்னரும் குறித்த வீதியில் உடைக்கப்பட்ட பகுதியை செப்பனிட்டுத் தரவில்லை எனக் குற்றம் சாட்டுகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் வலி.மேற்குத் தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த வீதியை உடைப்பது பற்றி எவ்விதமான ஆலோசனையையும் வீடமைப்பு அதிகார சபை பெறவில்லை எனவும் பின்னர் தகவல் அறிந்து கேட்டபோது கொங்கிறீட் இட்டுத் தருவதாக வாய்மூலம் உத்தரவாதம் வழங்கப்பட்டதாகவும் குறித்தவீதித் திருத்தம் தொடர்பில் உரிய தரப்பினருக்கு எழுத்துமூலம் அறிவித்து உத்தரவாதம் பெறப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# பனம்விதை நாட்டல்

(கொடிகாமம்)

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஒரு இலட்சம் பனம்விதை நடும் திட்டத்தின் கீழ் நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கச்சாய் கடற்கரையில் பனம் விதை நடும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஒரு இலட்சம் பனம்விதை நடும் திட்டத்திற்கு அமைய சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் நிலைபேண் இலக்குகளுக்கான இளைஞர் சபையின் ஏற்பாட்டில் ஏனைய பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்கும் விரிவுபடுத்தப்படும் என யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் அமைப்பாளர் சு.நக்கீரன் அறிவித்துள்ளார். (5)




# கலை வட்டத்தின் ஓவியக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் "இருப்பும் இழப்பும்" எனும் தலைப்பிலான ஓவியக் காட்சி எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய கலைப்பீடக்கட்டத்தொகுதியிலுள்ள கலைப்பீடத்தில் இடம்பெறவுள்ளது.

இக் காட்சியில் இளம் ஓவியரான நிலானி ஜோசேப்பின்படைப்புக்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இவ் ஓவியக் காட்சி எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை காட்சிப்படுத்தப்படும் என யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் கலாநிதி தா.சனாதனன் அறிவித்துள்ளார். (5)





சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட குணநலம் பெறும் நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. வைத்திய அத்தியட்சகர் டயாழினி மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு நிலையத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். மேலும் இந் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சரவணபவன், யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி . தேவந்தினி பாபு, சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன், வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-சுபேசன்)

# தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருத்தமற்ற கருத்துக்களைத் தவிருங்கள்!



## ஜனாதிபதி மைத்திரி வேண்டுகோள்

(கொழும்பு)

**நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படும் வகையிலான பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்குமாறு தான் அனைவருக்கும் வேண்டுகோள் விடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

இராணுவத்தின் விசேட படையணிக்கு ஜனாதிபதி மற்றும் ரெஜிமென்ட் வர்ணமளிப்பதை அடையாளப்படுத்தும் ரண பரஷுவ, ரெஜிமென்ட் பரஷுவ விருது விழாவில் நேற்றுக் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தாய் நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம் பாதிக்கப்படத்தக்க கருத்துக்களை எவரும் வெளியிடக்கூடாதெனத் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்காக முப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையினர் ஆற்றிவரும் பணிகளை பாராட்டிய ஜனாதிபதி ஒட்டுமொத்த தேசமும் என்றும் படையினருக்கு கடமைப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கீழ்த்தரமான அரசியல் தேவைகளுக்காக படையினரின் அளப்பரிய சேவையைக் குறைத்து மதிப்பிட இடமளிக்க முடியாதெனவும் அன்று இராணுவத்திற்கு தலைமைத்துவத்தை வழங்கியவர்களே இன்று குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமைய அத்தகைய முறையற்ற கருத்துக்களை வெளியிடுதல் தொடர்பில் தான் பெரிதும் கவலையடைவதாக தெரிவித்தார்.

தற்போது அரசாங்கம் பாதுகாப்புத் துறையினருடன் இணைந்து தேசிய பாதுகாப்பை உயரிய அளவில் உறுதி செய்திருப்பதோடு மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இலங்கையில் இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாவுல ரெஜிமென்ட் படையணி தலைமையகத்திற்கு நேற்று முற்பகல் விஜயம் செய்த முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி அவ்வளாகத்தில் அமைக்கப்பட்ட இராணுவ நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினார். (இ-7)

# சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் தேர்தலில் களமிறங்குவது உறுதி

(சிலாபம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் நிச்சயம் களமிறக்கப்படுவார்என மேல்மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

சிலாபத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை இன்னமும் வீழ்ச்சியடையவில்லை.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரொருவர் நிச்சயமாக போட்டியிடுவார்.

அத்துடன் எதிர்வரும் தேர்தல்களில் எந்தவொரு அரசியல் கட்சியாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு இன்றி வெற்றி பெறுவது கடினம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# புகையிரதசேவை அபிவிருத்திக்கு 160 மில்.அமெ.டொலர் கடனுதவி

(கொழும்பு)

இலங்கைப் புகையிரத சேவை செயற்பாடுகளின் செயற்றிறனை அதிகரிப்பதன் ஊடாக அச்சேவையை நவீனமயப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 160 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்கியது.

இலங்கையின் புகையிரத சேவை அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும் முதலாவது கடனுதவி இதுவாகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் 2050 ஆம் ஆண்டாகும் போது அதன் சனத்தொகை 25 மில்லியனாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே இத்தகைய சனத்தொகை அதிகரிப்பிற்கு ஈடு கொடுப்பதற்கு அதன் பொதுப் போக்குவரத்துச்சேவையின் தரத்தை மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் போக்குவரத்துப் பிரிவு விசேடநிபுணர் ஜொஹான் ஜோர்ஜெட் தெரிவித்தார்.

அத்தோடு முன்னேற்றகரமான புகையிரதப் போக்குவரத்து ஏனைய சேவை அபிவிருத்திகளுக்கும், நாடளாவிய ரீதியிலான கைத்தொழில் மேம்பாட்டிற்கும் உறுதுணையாக அமையும் என்பதுடன் சாத்தியமானதும் வசதியானதுமான போக்குவரத்து என்ற தெரிவை மக்கள் மனங்களில் ஏற்படுத்தவும் முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மூவின மக்களும் எதிர்பார்க்கும் சகல தகுதியுள்ள வேட்பாளரை நாளை அறிவிப்போம்-ஜே.வி.பி.

(கொழும்பு)

இந்த நாட்டில் மூவின மக்களும் எதிர்பார்க்கும் சகல தகுதிகளும் கொண்ட ஜனாதிபதி வேட்பாளரையே நாளை களமிறக்குவதாக அறிவித்த மக்கள் விடுதலை முன்னணி, பிரதான கட்சிகளின் பொய்களையும் ஊழல் குற்றங்களையும் நிராகரிக்கும் சகல மக்களும் தம்முடன் இணைந்து புதிய பயணத்தை ஆரம்பிக்க வருமாறும் அழைப்பு விடுத்தது.



மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட போதே அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜபக்ஷவை வீழ்த்தி ஆட்சிக்கு வந்த ரணில்-மைத்திரி அரசாங்கம் மீண்டும் ராஜபக்ஷவைப் பலப்படுத்தும் வேலைத்திட்டங்களையே முன்னெடுத்தது. இந்த ஆட்சியில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றன. ஊழல் மோசடிகள் குறித்துப் பேசியவர்கள் மத்திய வங்கி ஊழலில் ஈடுபட்டனர்.

எனவே 2015 ஆம் ஆண்டும் ஊழல் ஆட்சியே முன்னெடுக்கப்பட்டது. இந்த ஊழல் ஆட்சிகள் இனியும் இடம்பெறக் கூடாது. மாறி மாறி இவர்களின் ஊழலை முன்னெடுக்க இடமளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# தேர்தல் அறிவிப்பு நாள் முதல் நாடளாவிய ரீதியில் எமது சத்தியாக்கிரகப் போராட்டம் வெடிக்கும்

## வேலையற்ற பட்டதாரிகள் அறிவிப்பு

(காரைதீவு)

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் நாடளாவிய ரீதியில் எமது சத்தியாக்கிரகப் போராட்டம் வெடிக்கும் என அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத் தலைவர் நசுருதீன் தெரிவித்தார்.



மேலும், அரசாங்கம் வெளிவாரிப் பட்டதாரிகளை மீண்டும் மீண்டும் புறக்கணித்தால் எதிர்வரும் தேர்தலில் அதற்கான பதிலைச் சந்திக்க வேண்டிவரும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

காரைதீவு, விபுலானந்த சதுக்கம் அருகில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அன்று உள்வாரி, வெளிவாரி என்ற கதை இருக்கவில்லை. இன்று வேண்டுமென்றே இந்தக் கதையை அரசாங்கம் தூக்கிப் பிடித்துள்ளது.

அரசாங்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலான உள்வாரிப் பட்டங்களை முடித்த பட்டதாரிகளை தொழிலுக்கு உள்வாங்கியது. அதேபோன்று, வெளிவாரிப் பட்டதாரிகளையும் உங்வாங்க வேண்டும்.

3 வருடமாக நாம் இப்போராட்டத்தை நடத்தி வருகிறோம். எமது தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகள் எமது பிரச்சினையை ஏறெடுத்தும் பார்க்காமல் இன்று ஆழ்ந்த தூக்கத்தில் உள்ளனர்.

நீங்கள் உடனடியாக கண் விழித்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் பிறகு தேர்தல் என்று வரும் போது நாம் ஆழ்ந்த தூக்கத்திலிருக்க வேண்டிவரும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் மட்டுமே இப்படி எமக்கு ஓரவஞ்சனை செய்கிறது. முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்த அரசாங்கங்கள் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் போது உள்வாரி, வெளிவாரி எனப் பார்க்கவில்லை. ஆக ஆண்டு அடிப்படையில் மட்டுமே பார்த்தார்கள்.

ஆனால், இன்று இப்பாரபட்சம் வேண்டுமென்றே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அரசாங்கத்திடம் நாம் கேட்ட போது, ஏன் வெளிவாரியை புறக்கணிக்கிறார்கள் என்ற கேள்விக்கு பதில் வருவதில்லை. ஆக முதலில் உள்வாரிக்கு கொடுக்கிறோம். இரண்டாம் கட்டமாக வெளிவாரிக்கு வழங்குவோம் என்று மட்டுமே பதில் வருகிறது. இதனால், வெளிவாரி பட்டதாரிகள் மத்தியில் ஒருவித ஏக்கமும் தாழ்வு மனப்பான்மையும் ஏற்பட்டுள்ளது.

பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான விண்ணப்பம் கோரும் போது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் அவசியமானது என்று மட்டுமே கூறப்பட்டிருந்தது.

நேர்முகப்பரீட்சை நேரத்திலும் அதையிட்டு ஒன்றுமே சொல்லவில்லை. ஆனால், இன்று நியமனம் வழங்கும் கட்டத்தில் வைத்து இவ்வாறு வெளிவாரிப் பிரச்சினையை அரசாங்கம் முன்வைத்து அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

நாம் கேட்டதற்கு 75 வீதம் உள்வாரிக்கும், 25 வீதம் வெளிவாரிக்கும் முதலில் வழங்குவோம் என்றனர். அதுகூட தற்போது மீறப்பட்டுள்ளது.

இனியாவது அரசாங்கம் எவ்வித பாகுபாடுமின்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த சகல பல்கலைக்கழகங்களிலுமிருந்து வெளியேறும் சகல பட்டதாரிகளுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி அரச தொழில்களை வழங்க வேண்டும். இல்லாவிட்டால் வீதியில் இறங்கிப் போராட வேண்டிவரும் என்பதைப் பிரதமருக்கு தெரியப்படுத்துகின்றோம்.

அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்யவும் தயங்க மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அச்சமின்றி கருத்துக்களை முன்வைக்காவிட்டால்

# மதத்தலைவர்களின் மதிப்பு குறைந்துவிடும்

## சுமங்கல தேரர் சுட்டிக்காட்டு ரணில்-ரஞ்சன் இடையே உடன்பாடு



(கொழும்பு)

**மோசடியான அரசியல்வாதிகள் மகா நாயக்கர்களைச் சந்திக்கச் செல்லும் போது அச்சமின்றி தமது கருத்துக்களை தெரிவிக்காவிட்டால் மதத் தலைவர்களுக்குள்ள மதிப்பு குறைந்து விடும்என உலபனே சுமங்கல தேரர்சுட்டிக்காட்டினார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகாநாயக்கர்கள் மற்றும் கர்தினால் தலைமையில் தேர்தலின் போது கட்சி ஒன்றில் போட்டியிடும் வேட்பாளர் பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பு முன்வைக்கப்பட்டதாகவும் எனினும் அதனை பின்பற்றாவிடின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து அதில் குறிப்பிடப்படாமை வருத்தத்துக்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேபோல், ரஞ்சன் ராமநாயக்க என்ற மோசடியான அரசியல்வாதி தொடர்ந்தும் சமூக எதிர்ப்புப் கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், பிரதமர் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமைக்கான காரணம், ரஞ்சன் ராமநாயக்கவின் செயற்பாடுகள் பிரதமருடனான ஒப்பந்த அடிப்படையில் இடம்பெறுவதனாலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## டிப்பர்-வான் மோதி விபத்து; மூவர் பலி! இருவர் படுகாயம்

(தம்புள்ள)

ஹபரண - தம்புள்ள வீதியில் மீகஸ்வெவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்ததோடு, இருவர் படுகாயமடைந்தனர்.

தம்புள்ளயிலிருந்து ஹபரண பகுதி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்றும், எதிர்த்திசையில் பயணித்துக் கொண்டிருந்த டிப்பரும் நேருக்குநேர் மோதி இவ்விபத்து சம்பவித்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ்விபத்தின் போது, வானில் பயணித்த பெண்கள் இருவர் மற்றும் வான் சாரதி ஆகியோர் உயிரிழந்தனர்.

அத்தோடு, இவ்விபத்தில் படுகாயமடைந்த ஆணொருவரும் பெண்ணொருவரும் தம்புள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குருநாகல்,பொலநறுவை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 33, 40, 27 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவ்விபத்தைத் தொடர்ந்து குறித்த டிப்பர் சாரதியைக் கைது செய்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சஹ்ரானின் மனைவி இரகசிய சாட்சியம்

(கொழும்பு)

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவன் மொஹமட் சஹ்ரான் ஹாஷிமின் மனைவி, கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் இரகசிய சாட்சியமளித்தார். கொழும்பு கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் சஹ்ரானின் மனைவி நேற்று முன்தினம் மாலை இரகசிய சாட்சியமளித்தார்.

கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதியான ஷங்ரிலா ஹோட்டலில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் சஹ்ரான் ஹாஷிம் மற்றும் மொஹமட் இப்ராஹிம் இல் ஹாம் அஹமட் ஆகியோர் தொடர்பான சாட்சி விசாரணைகளின் போதே இவர் சாட்சியமளித்தார்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் சந்தேக நபர்கள் நீதவான் முன்னிலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் மொஹமட் சஹ்ரான் ஹாஷிமின் மனைவியான அப்துல் காதர் பாதிமா ஹாதியா மற்றும் அவரது நான்கு வயது மகளான மொஹமட் சஹ்ரான் ருக்ஷியா ஆகியோர் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அத்துடன், மற்றைய தற்கொலைக் குண்டுதாரியான மொஹமட் இப்ராஹிம் இல்ஹாம் அஹமட்டின் தந்தை மற்றும் சகோதரர்கள் நீதவான் முன்னிலைக்கு நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இதேவேளை, தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் மொஹமட் சஹ்ரான் ஹாஷிமுடன் பயிற்சிகளை எடுத்துக் கொண்டதாக கூறப்படும் மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேக நபர்கள் அம்பாறை பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது. அரச புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமையவே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை பகுதிகளிலிருந்த முகாம்களில் பயிற்சிகளை பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின் கீழ் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். மாவனெல்லை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சஹ்ரானுடன் பயிற்சி பெற்ற குற்றச்சாட்டின் பேரில் இந்த மாதத்தில் மட்டும் அம்பாறைப் பகுதியில் 9 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கத்திக்குத்தில் இருவர் உயிரிழப்பு! மூவர் அதிரடிப் படையினரால் கைது

(மாதம்பிட்டி)

கொழும்பு, மாதம்பிட்டி மயானத்திற்கு அருகில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவம் தொடர்பாக மூவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கிராண்ட் பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆட்டோவில் வந்த நபர்களால், கூரிய ஆயுதம் மூலம் இருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் படுகாயமடைந்த குறித்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில், "ஆனமாலு ரங்க" எனும் 39 வயதான பாதாள குழு உறுப்பினர் ஒருவரும் 22 வயது நபர் ஒருவரும் மரண மடைந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இச் சந்தேக நபர்கள் தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கொட்டாஞ்சேனை, சமித்புர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இக் குற்றத்தை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இந்தியாவின் தவறான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துக

## இலங்கை உள்ளிட்ட நாடுகளிடம் பாக்.கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் கலாநிதி ஷாஹித் அஹ்மத் ஹஷ்மத் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை சந்தித்து ஜம்மு -காஷ்மீரில் இடம்பெற்று வரும் அசாதாரண நிலைமை குறித்து விளக்கமளித்தார்.

இச்சந்திப்பின் போது பாக். உயர்ஸ்தானிகர் சர்வதேச ரீதியாக பிரச்சினைக்குரிய பிரதேசமாக அறியப்பட்ட ஜம்மு -காஷ்மீரின் சிறப்பு மாநில அந்தஸ்தை மாற்றுவதற்கு இந்தியா மேற்கொண்ட நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கு எதிரானதாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், காஷ்மீரின் மக்கள் தொகையை மாற்றியமைக்க இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் சர்வதேச சட்டத்தை மீறும் நடவடிக்கை எனவும் தூதுவர் விளக்கமளித்தார்.

ஏழு தசாப்தங்கள் பழைமையான இப்பிரச்சினைக்கு அமைதியான முறையிலும் ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களுக்கேற்பவும் தீர்வை மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தை பலதடவைகள் பாகிஸ்தான் வலியுறுத்தியதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்திய அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் நடவடிக்கைகள் பிராந்திய ஒத்துழைப்பு, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு கடுமையான அச்சுறுத்தலாக காணப்படுகின்றது எனவும் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே பிராந்திய நாடுகளும் மற்றும் சர்வதேச சமூகமும் மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகின்ற அவ்வாறான தவறான செயல்களில் ஈடுபடாதவாறு இந்திய அரசாங்கத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என பாக். உயர்ஸ்தானிகர் கேட்டுக் கொண்டார். (இ-7)

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–180

# விவசாயியும் தொழிலதிபராகலாம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்னும் திருக்குறளின் உள்ளார்ந்த அர்த்தம் அனைத்து தொழிலும் உழவின் பின்னால் தான் என்பதாகும். மாறாக அனைத்து மக்களுக்கும் உணவு செய்பவன் உழவன். இத்தகைய பெருமையுடைய இத்தொழிலை விரும்பி செய்கின்ற இளையவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்து வருகின்றது.

விவசாயத்தை முழுமையாக நம்பி தொழில் செய்பவர்களுக்கான ஆதாயம் அதிலிருந்து கிடைப்பதில்லை என்னும் பொதுவான கருத்தை நாம் வெறுமனே அலட்சியம் செய்யக் கூடாது.

விவசாயிகள் கிடைக்கின்ற விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினை உள்வாங்கி விவசாயத்தை செய்வதற்கான இடு பொருட்களை தரமானதாக கொடுப்பதுடன் அவர்களுக்கான இலகு வழி இயந்திரமயமான உற்பத்தியினையும் ஏற்படுத்திக் கொடுத்தால் இவற்றுடன் சேர்த்து அவர்களின் விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்பினையும் முழுமையாக ஏற்படுத்தினால் இளையவர்களை கிராமத்திலேயே உழவுத்தொழிலில் ஈடுபட வைக்க முடிவதுடன் விஞ்ஞான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிடைக்கின்ற விளைச்சலை மேலும் அதிகரிக்க முடிவதுடன் தரமானதாக இன்னும் மதிப்பேற்றஞ் செய்து விற்பனைக்கு விடமுடியும்.

விவசாயிக்கு பயிர் உற்பத்தி செய்வது மட்டும் தான் தொழிலல்ல. உற்பத்தியான பொருட்களை சந்தைப்படுத்துவ்தில் அதிகரித்த கேள்வியை பெறுவதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமாயின் அவர்களை தொழிலதிபராகவும் உயர்வடைய வைக்கலாம்.

தமது விளைச்சலிலிருந்து தொழிலாக்க முயற்சியை செய்யும் அனைவரும் உணவுற்பத்தியின் தொடர் பங்காளிகளாவர்.

விவசாயம் சார்ந்த தொழில் முயற்சிகளுக்கு வசதி வாய்ப்புக்கள் அதிகமாகும்.

எமது விவசாய இளைஞர்களுக்கு விவசாய தொழில்நுட்பங்களை அறிவூட்டுவதுடன் அவர்களுக்கான தொழிலுருவாக்கல் வழிகளையும் உருவாக்கிக் கொடுத்தால் பல தொழில் முயற்சியாளர்களை எமது தேசத்தில் உருவாக்கிக் கொள்ள முடியும்.

தொழில் தொடங்குவதற்கான வழிவகைகள் என பலவுண்டு. 18 தொடக்கம் 40 வயதுக்கிடையிலான விவசாயத்திலீடுபடும் இளைஞர்களை தொழில்முயற்சியில் ஈடுபட வைப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் இளையவர்களுக்கான தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது சார்ந்து இம்மாதம் 23 - 28 ஆம் திகதிகளுக்கிடையிலான காலத்தில் பல செயற்றிட்டங்கள் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகினறன. இதில் விவசாய குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு சேதன முறை பயிர்ச் செய்கையில் உற்பத்தி தொழில்னுட்ப அறிவை வழங்குவதோடு அவர்களை விவசாய விளைச்சல் பொருட்களை வைத்துக்கொண்டு தொழில் முயற்சியை தொடங்குவதற்கான அறிவிப்பையும் செய்ய இருக்கின்றனர்.

இதன் மூலம் ஒவ்வொரு விவசாயியும் சிறிய தொழிலதிபர்களாக மாறுவதற்கான வாய்ப்புக்கள்அதிகம். மேலும் மேற்படி தொழில் முயற்சியில் இறங்க இருப்பவர்களுக்காக ஆக்க் குறைந்தளவான 6.5 சதவீதத்தில் வங்கியில் கடன் பெற்று இதனை முழுமை பெறச்செய்தால் அதன்மூலம் பல தொழில்முயற்சியாளர்களை உருவாக்க முடியும்.

மேற்படி தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் போது சேதன விளைபொருட்களை உற்பத்தி செய்யவும் அதற்கான அணுகுமுறைகளை கையாள்வதற்கான தேவையான சட்டகத்தை உருவாக்க்வும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக சேதன. விளைபொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கான அறிவினை வழங்கவும் அதற்கான சந்தை வாய்ப்பினை உருவாக்கவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. விவசாய இளைஞர்களை உள்வாங்கிய செயற்றிட்டமாக இது உருவெடுத்தாலும் அனைத்து இளைஞர்களும் இணைந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இதிலுண்டு. இளையோர் இணைந்து சிறந்த தொழில் முயற்சிக்கான திட்டத்தை முன்வைக்கலாம்.

சிறந்த திட்டத்திற்கு குறைந்த சதவீதத்தில் கடனைப் பெறக் கூடியதாகவும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மற்றும் கற்று வெளியேறிய பட்டதாரி இளைஞர்,யுவதிகள் இணைந்து இந்த தொழில் முயற்சியாளர் செயற்றிட்டத்திற்குள் உள்வாங்கப்படலாம்

இது சம்பந்தமான விபரங்களைப் பெற்றுக்கொள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அந்தந்த பீடங்களுக்கான பல்கலைக்கழக தொழிலுருவாக்கல் இணையத்தின் அலகின் (University Business Linkage cell) இணைப்பாளர்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது பல்கலைக்கழக தொழிலுருவாக்கல் அலகின் பணிப்பாளர் கலாநிதி ரி. ஈஸ்வரமோகன் (விலங்கியல்துறை தலைவர்) தொடர்பு கொள்ளலாம். இதனை விட ஜனாதிபதி செயலகத்தின் இணையத் தளத்திற்கு சென்று இத்திட்டம் பற்றிய தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

விவசாய இளைஞர்,யுவதிகளை ஒன்றிணைத்த அமைப்பு ஒன்றினை உருவாக்கி இளையவர்களை இந்த செயற்றிட்டத்தினுள் உள்ளார்ந்து அவர்களுக்கான தொழில் வாய்ப்பினை உருவாக்கும் பொறிமுறையாகவே இதனைக் கருதலாம்.

இதனுடன் சேர்த்து விவசாயிகளுக்கான உழவர் சந்தையை உருவாக்குவதற்கான பொறிமுறையும் இதனுள் உள்ளடங்கியிருக்கின்றது. பல வழிகளில் பலமுறை உழவர் சந்தையை உருவாக்குவதில் முனைப்பு காட்டியும் இது சாத்தியப்படாமலேயே இருக்கின்ற நிலையில் தற்போது மீண்டும் உழவர் சந்தையை உருவாக்க வழி பிறந்திருக்கின்றது.


இதில் மாகாண விவசாய திணைக்களமும் முழுமையாக ஈடுபடுகின்றதனால் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் சேதன விவசாய உற்பத்தித் திட்டத்தை முன்னெடுக்கின்ற அதே நேரத்தில் அதற்கான சிறந்த சந்தை வாய்ப்பினையும் உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

இளையோரை அவர்களுக்குத் தேவையான விஞ் ஞான தொழில்நுட்ப அறிவையும் பயன்பாட்டையும் கொடுத்து அவர்களின் முழுமையான பங்களிப்புடன் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமாக இதனைப் பார்க்க முடியும். அவ்வாறு நடைபெறின் வட மாகாணத்தில் புதியதொரு தொழில்வாய்ப்புக்கான வழி பிறக்கின்றது எனக் கருதலாம்.

இதனையும் சுற்றுலாத் துறையுடன் இணைத்தால் இன்னும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்க வழியுண்டு. மேலும் இத்திட்டத்தில் க.பொ.த. சாதாரண தரம் வரையும் இன்னும் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்றவர்களும் இணைந்து கொள்ள வழியிருக்கின்றது.

விபரங்களை முழுமையாகப் பெற்று தங்களை தொழிலதிபர்களாக மாற்றிக் கொள்ள விவசாயம் சார்ந்த இளையவர்கள் அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 193**



# வரட்சியால் கிளிநொச்சியில் 31 ஆயிரம் பேர் பாதிப்பு



(அக்கராயன்)

நாட்டில் நிலவி வரும் வரட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 8ஆயிரத்து 839 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக. கிளிநொச்சி மாவட்ட அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 50 கிராமசேவையாளர் பிரிவுகளின் பாதிப்பு அதிகமாகவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக அடிப்படைத் தேவையான குடிநீர் விநியோகத்தினை இயன்றளவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

இந்த வரட்சி தொடருமாக இருந்தால் குடிநீர் வழங்குவதும் சிரமமாக இருக்கும். இரணைமடுக்குளத்தை நம்பி விவசாயம் செய்த கமக்கார அமைப்புகள் சில தங்களுடைய நெற்பயிர்ச் செய்கைக்கான நீரை பெற்றுக் கொள்வதில் மும்முரமாகவுள்ளனர்.

இக்கட்டான ஒரு சூழலில் நெற்பயிர்களுக்கு நீரைவழங்குவது ஒருகட்டாய தேவையாகவுள்ள அதேநேரம், குடிநீர் தேவைக்கும் நீரை வழங்க வேண்டிய சந்தர்ப்பத்திலேயே எவ்வாறு நீரை முகாமைத்துவம் செய்வது என்பதில் நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம்.

மழை பெய்தால் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-350)

# தாமதமான நீர்விநியோகத்தால் சிறுபோக விவசாயிகள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக்கான ஆரம்ப நீர் விநியோகத் திகதியில் நீர்விநியோகிக்கப்படாது தீர்மானத்தின் படி நீர்விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால் பெருமளவான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் சிறுபோகச்செய்கைக்கு உரிய முறையில் நீர்விநியோகம் கிடைக்காமையால் கூடுதலான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 8ஆம்திகதி முதல் சிறுபோகச் செய்கைக்கான நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நீரின்றி கருகிய நிலையில் காணப்படுகின்றன.

அதாவது, கடந்த மார்ச் மாதம் 12ஆம்திகதி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற சிறுபோக பயிர்ச்செய்கை கூட்டத்தில் அக்காலப்பகுதியில் இரணைமடுக்குளத்தில் இருந்த நீரின் அளவைக் கொண்டு 15 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையும் 500 ஏக்கர் உப உணவுச்செய்கையும் 600 ஏக்கர் திருவையாறு ஏற்று நீர்ப்பாசனச் செய்கையும் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டு அதற்கான நாட்காட்டி பின்வருமாறு தயாரிக்கப்பட்டது.

வாய்க்கால் துப்புரவுக்கான திகதி மார்ச்மாதம் 19ஆம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 26ஆம் திகதி வரையும் பங்கு அணைப்பதற்கான இறுதி திகதி ஏப்ரல் மாதம் 11ஆம் திகதியாகவும் விதைப்பிற்கான இறுதி திகதி மே மாதம் 02ஆம் திகதியும் ஆரம்ப நீர் விநியோகத் திகதி ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி என தீர்மானிக்கப்பட்டாலும் காணிகளை அடையாளப்படுத்துவதிலும் வாய்க்கால்களை துப்புரவு செய்தல் போன்றவற்றில் காலதாமதங்கள் ஏற்பட்டதன் காரணமாகவும் கமக்கார அமைப்புக்களினுடைய ஒழுங்குபடுத்தல்களில் ஏற்பட்ட காலதாமதங்களினாலும் ஏப்ரல் மாதம் இறுதியிலே ஆரம்ப நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆரம்ப நீர் விநியோகத்தை கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக் வழங்காது காலம்தாழ்த்தி வழங்கி விட்டு தீர்மானத்தின்படி நீர்விநியோகத்தை நிறுத்தியுள்ளமையால் கூடுதலான வயல் நிலங்கள் நீர் இன்றிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் தாங்கள் பாரிய நட்டத்தை எதிர்கொள்வதாக சிறு போக செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (9-315)




# பிளாஸ்டிக் பாவனை தொடர்பில் விழிப்புணர்வு





(நெளுக்குளம்)

வவுனியாவில் அதிகரித்து வரும் பிளாஸ்டிக் போத்தல்களின் பாவனை தொடர்பாகவும் அதன் மீள் சுழற்சி தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு நேற்று வவுனியா நகரசபையிலும் நகர்ப் பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் தலைவர் இ.கௌதமன் தலைமையில் வவுனியா நகர்ப்பகுதியில் வீதியோரங்களிலும் வேறு இடங்களிலும் சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் விதமாக வீசப்படும் பிளாஸ்டிக் போத்தல்களை மீள்சுழற்சிக்காக சேமிக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு செயற்றிட்டமானது வவுனியா நகர்ப்பகுதியில் விசேடமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா நகரசபையின் உறுப்பினர்கள், வவுனியா வளாக மாணவர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், தொழிற்பயிற்சி மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டு பிளாஸ்டிக்போத்தல்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர். (9-299)



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ராஜித சேனாரட்ன அங்கு மரக்கன்று ஒன்றினை நாட்டி வைத்தார்.

# அடிப்படை வசதிகள் அற்ற பழைய முறிகண்டி கிராமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள பழையமுறிகண்டி கிராமத்தில் பல்வேறு தேவைப்பாடுகள் காணப்படுவதாகவும் அவற்றை சீர்செய்து தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பழைய முறிகண்டிக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் இவற்றை தீர்த்து வைக்குமாறும் தாங்கள் கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக கோரியும் இதுவரை தமக்கான அடிப்படை வசதிகள் எவையும் சீர் செய்யப்படவில்லை என்றும் இதனால் தாங்கள் அன்றாடம் துன்பங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது பழைய முறிகண்டி கிராமத்திற்கு பிரதான வீதி இன்றுவரை புனரமைக்கப்படாது காணப்படுவதனால் தமது போக்குவரத்துக்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ள பிரதேச மக்கள் இரண்டு கிலோ மீற்றர் வரையான உள்ளக வீதியினை புனரமைத்துத் தருமாறும் நெல் உலர்த்தும் மேடை மற்றும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை என்பவற்றை அமைத்து தருமாறும் பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி கோரிக்கைகள் தொடர்பில் இவ்வாண்டிலும் பிரதேச செயலரிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (9-315)

# சட்டவிரோத கட்டடம் தொடர்பில் நகரசபை அமர்வில் அமளி

(நெளுக்குளம்)

வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட வர்த்தக நிலையத்தால் வவுனியா நகரசபை அமர்வில் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

வவுனியா நகரசபை அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையம் அனுமதியின்றி அமைக்கப்பட்டிருப்பதாக கடந்த அமர்வுகளில் விவாதிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தது. எனினும் தற்போது திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது தொடர்பாக தெளிவுபடுத்துமாறும் குடியிருப்பு வட்டார உறுப்பினரான த.பரதலிங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.


அதற்கான சட்ட நடவடிக்கையை எடுக்கவிருப்பதாக சபையின் தவிசாளர் கௌதமன் பதில் தெரிவித்தார்.

உறுப்பினர்களான லறீப், பாயிஸ், பாரி ஆகியோர் வர்த்தக நிலையத்திற்கு ஆதரவாக கருத்து தெரிவித்த நிலையில் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் இந்த விடயத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதனால் வாக்குவாதம் முற்றியமையால் 5 நிமிடங்கள் சபையை ஒத்திவைப்பதாக தவிசாளர் உத்தரவிட்டார். (9-299)





யாழ். இந்திய துணைத்தூதரகம், இந்தியக் கலாசார உறவுகளிற்கான பேராயம் ஆகியன வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுத்த கலை, கலாசாரத்தை ஊக்குவிக்கும் நடன பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலாநிதி சிறி பரிமள் அசோக் பாட்கே குழுவினர் இணைந்து பரதநாட்டிய அளிக்கையினை முன்னெடுத்திருந்தனர். பரதநாட்டிய கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இடம்பெற்ற இந்த பயிற்சி பட்டறையில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் கலந்துகொண்டதுடன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதில் பரத நாட்டிய பயிற்சிகள் வழங்கப்பட்டன.



வவுனியா பண்டாரிக்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் இரதோற்சவத் திருவிழா கடந்த புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெறவில்லை

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கவலை

(மன்னார்)

ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த சம்பவத்துக்கு இன்னும் அரசோ அரசியல்வாதிகளோ நீதியான, உண்மையான விசாரனைகளை மேற்கொள்ளாது இருப்பதாக இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கவலை தெரிவித்துள்ளது.

அத்துடன் நீதி நேர்மையுடன் பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகளை மேற்கொள்வது கட்டாய தேவையாக இருக்கின்றது என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்தி நிற்பதாக மன்னார் ஆயர் வண. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மடு ஆலய பெருவிழாவில் மறையுரை ஆற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின்னர் நாட்டின் சூழல் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு இத் தாக்குதல் தொடர்பாக குற்றவாளிகளை விசாரணை செய்து நீதியின் முன் கொண்டு வருமாறு நாம் தாழ்மையுடன் அரசை கேட்டிருந்தோம்.

ஆனால் இது விடயமாக நீதியான, உண்மையான எதுவும் இன்னும் இடம்பெறவில்லை.

இது விடயமாக இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்து நிற்கின்றது.

பாதுகாப்புக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் பொறுப்புக் கூற வேண்டும் என்பதையும் நாம் கேட்டு நிற்கின்றோம்.

அத்துடன் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உதவிகளுக்கு நாம் நன்றி கூறி நிற்பதுடன் மீண்டும் அரசை வேண்டி நிற்பது நீதியான, உண்மையான விசாரணையை மேற்கொள்ளும் படியும் நடந்த சம்பவத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் குற்றவாளிகளை நீதியின் முன் கொண்டு வர வேண்டும் எனவும் நாம் மீண்டும் வலியுறுத்தி நிற்பதாக மேலும் தெரிவித்தார். (9-285)

# சட்டவிரோத மணல் அகழ்வை ஆராய ஜனாதிபதி செயலக அதிகாரிகள் கள விஜயம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி செயலக அதிகாரிகள் கள விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில் ஊடகங்களால் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த வகையில் ஜனாதிபதி செயலகத்துக்கும் குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டது.

அதனடிப்படையில் முல்லைத்தீவில் இயற்கைக்கு பாதகம் ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி செயலக அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், புவிச்சரிதவியல் அளவியல் தலைமைப் பணியக அதிகாரிகள் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு- கேப்பாபிலவு, நந்திக் கடல் கள்ளியடி மற்றும் பாவடைகல் ஆற்றுப்பகுதி, இருட்டுமடு, மூங்கிலாறு சுதந்திரபுரம் போன்ற பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்டு அதிகாரிகள் திகைப்படைந்ததுடன் குறித்த பிரச்சினைகள் தொடர்ப்பில் விரிவாக ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.(9-281)

# வவுனியா மாணவர்கள் தேசிய ரீதியில் சாதனை





(குருமன்காடு)

தேசிய கணித விஞ்ஞான ஒலிம்பியாட் பரீட்சையின் முடிவுகள் தற்போது வெளியாகி உள்ள நிலையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் மயூரன் யதுர்சன் 135 புள்ளிகளுடன் தேசிய ரீதியில் மூன்றாமிடத்தையும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய மாணவி எஸ்.சப் தகி 130 புள்ளிகளுடன் தேசிய ரீதியில் ஐந்தாமிடத்தையும் பெற்று சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் வவுனியாவில் இருந்து கலந்து கொண்ட சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி ரி.கபிசா 117.5 புள்ளிகளுடன் 18 ஆம் இடத்தையும் வவுனியா தமிழ் ம.ம.வி.மாணவன் எஸ். கரிஸ் 116 புள்ளிகளுடன் 21 ஆம் இடத்தையும் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி ஜெ.சாகித்தியா 115.5 புள்ளிகளுடன் 22 ஆம் இடத் தையும் வவுனியா தமிழ் ம.ம.வி மாணவன் எஸ்.சன்சய் 113 புள்ளிகளுடன் 26 ஆம் இடத்தையும் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி எஸ். ஆரபி 80.5 புள்ளிகளுடன் 100 ஆவது இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இவர்களை வவுனியா மாவட்ட விஞ்ஞானகள கற்கை நிலைய முகாமையாளர் அ.ஜெய்கீசன், வவுனியா தெற்கு கல்வி வலய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் இ.மாதவன், ஓய்வு நிலை விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இந்திரலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் பயிற்று வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)




# கிறிஸ்தவ தேவாலயத்தை உடைத்து தகாத வார்த்தைகளை எழுதிய விசமிகள்

(குருமன்காடு)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் தேவாலயமொன்று உடைக்கப்பட்டு தகாத வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

. வவுனியா கூமாங்குளம் முறியாகுளம் பகுதியிலுள்ள புனித இராயப்பர் தேவாலயத்தில் விசமிகள் சிலர் கடந்த 13 ஆம் திகதி இரவு உடைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. 14 ஆம் திகதி மாலை தேவாலயத்திற்கு வழிபடச்சென்ற பொதுமக்கள் சிலுவைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள பூச்சாடி எரியூட்டப்பட்டிருப்பதை அவதானித்ததையடுத்து நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தினர்.

நேற்று முன்தினம் காலை தேவாலயத்திற்கு ஆலய நிர்வாகத்தினர் சென்று பார்த்த போது தேவாலயத்தின் பின் பக்கம் உடைக்கப்பட்டு உள்ளே சிலர் சென்றுள்ளதாகவும் நிறப்பூச்சை பயன்படுத்தி ஆலயத்தின் சுவரில்



தகாத வார்த்தைகள் எழுதப்பட்டிருந்துள்ளது. இதை அவதானித்த நிர்வாகத்தினர் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி டம்பத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மோப்ப நாயின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்டதுடன் ஆலயம் உடைக்கப்பட்டு தகாத வார்த்தைகள் எழுதப்படுள்ளது மட்டுமே இடம்பெற்றுள்ளதாகவும் திருட்டுச் சம்பவங்கள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லையென ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வருவதாகவும் மேலதிக விசாரணைகள் இடம் பெறுவதாகவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9-250-299)

# கிளி.ஜெயபுரத்தில் வனவளத்திணைக்களம் ஆக்கிரமித்துள்ள வயற்காணிகளை விரைவில் விடுவிக்க இணக்கம்

கிளிநொச்சி ஜெயபுரம் வடக்கு பகுதியல் வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள வயல் காணிகளில் 43 கெக்ரேயர் காணிகளை முதற் கட்டமாக விடு விப்பதற்கான இணக்கம் காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பூநகரி பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார். 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக மலையகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பூநகரி ஜெயபுரம் கிராமத்தில் குடியேறி நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

1984 ஆம் ஆண்டுகளில் இந்தப் பிரதேசத்தில் 548 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கான காணிகளும் நெற்செய்கையை மேற்கொள்ளக்கூடிய வகையில் தலா ஒரு ஏக்கர் வரையான வயல் காணிகளும் அப்போது வழங்கப்படிருந்தன.

அவற்றை சுத்தம் செய்து பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில் தொடர்ந்து ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் குறித்த பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்கள் இடம் பெயர்ந்து வெளிமாவட்டங்களிலும் இந்தியாவின் தமிழகத்திலும் தஞ்சமடைந்திருந்தனர்.

யுத்தச்சூழல் அற்ற அமைதியான இக்காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து மக்கள் மீள்குடியேறியுள்ளனர். இவ்வாறு மீள்குடியேறிய மக்கள் தமது வயல் காணிகளை சுத்தம் செய்து வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள முனைந்த போது குறித்த வயல் நிலங்கள் கண்ணிவெடிகள் ஆபத்தான பகுதியாகக் காணப்பட்டு அவற்றுக்குள் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

கடந்த 2016 ஆம் ஆண்டில் இந்தப் பிரதேசங்களில் காணப்பட்ட வெடிபொருட்கள் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் அகற்றப்பட்டு இறுதிப் பகுதியில் பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஜெயபுரம் மக்களுக்குரிய வயல் காணிகளில் கண்ணிவெடிகளை அகற்றிய பகுதிகளிலிருந்து 100 ஏக்கர் காணியை முதற்கட்டமாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதென்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் வனவளத் திணைக்களம் குறித்த காணிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாகத் தெரிவித்து அதனை சுத்தம் செய்யும் பணிகளை தடுத்து நிறுத்தியது.

இதனையடுத்து, 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி குறித்த காணிகளை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வனவள உத்தியோகத்தர்களின் களவிஜயத்தின் போது அங்கு வனவளத்திணைக்களத்திற்குச் சொந்தமான எந்தவித அடையாளங்களும் அங்கு காணப்படவில்லை.

இருந்தபோதும் வனவளத் திணைக்களம் இந்தக்காணிகள் தமக்குச் சொந்தமான காணிகள் என்று குறிப்பிட்டு அந்தப் பகுதியில் அபிவிருத்திப்பணிகளை தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து இப்பகுதி கமக்கார அமைப்பினர் வடமாகாண ஆளுநர் யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் மனோ கணேசன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரச தலைவர் என்று எல்லோருக்குமே தங்களுடைய கோரிக்கை மனுக்களை கையளித்திருந்தனர். ஆனால் எந்தவித தீர்வும் கிடைக்காத நிலையில் கடந்த ஜனவரி மாதம் இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்திலும் முறைப்பாடு செய்தனர்.

அதன்தொடர்ச்சியாக நாடாளுமன்ற அலுவலகத்தில் உள்நாட்டு அலுவல்கள் மீாகாண சபைகள் மற்றும் உள் ளுராட்சி அமைச்சர் வஜிர அபே வர்த்தன தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் குறித்த காணிகளை மேற்படி மக்களு க்கே வழங்க வேண்டும் என்றும் இக்கலந்துரையாடலில் முடிவெ டுக்கப்பட்டு மேற்படி வயற்காணி களை உடனடியாக அளவீடு செய்து ஒரு மாதகாலத்திற்குள் அம்மக்களுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முடிவு எட்டப்பட்டாலும் இது தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலாளரிடம் கேட்ட போது, அமைச்சர் மட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப்பின்னர் 43 கெக்ரேயர் காணிகளை விடுவிப்பதற்கு மாவட்ட வனவளத் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது.


1983 ஆம்ஆண்டு காலப்பகுதியில் காணிகளைப் பெற்றுக் கொண்ட 133 குடும்பங்கள் தற்போது இருப்பதாகவும் தெரிவித்த அவர், இக்காணிகளை விரைவாக விடுவித்து அந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேலும் தெரிவித்தார். (9-315)

# பாரதம்

## சிறப்பு அந்தஸ்து இரத்து

# காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிராக நாம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்

## பயங்கரவாதக்குழுக்கள் எச்சரிக்கை



(முசாபராபாத்)

காஷ்மீர் நடவடிக்கையால் கடும் கோபமடைந்துள்ள பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் பயங்கரவாதக் குழுவினர் இந்தியாவிற்கு கடும் எச்சரிக்கை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை இந்திய அரசு இரத்து செய்ததுடன், அந்த மாநிலத்தை 2 யூனியன் பிரதேசமாக பிரித்துள்ளது. இதற்கு ஜம்மு-காஷ்மீரில் உள்ள பிரிவினைவாதத் தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் ஜம்மு-காஷ்மீரில் அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக இராணுவம் குவிக்கப்பட்டு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் நடவடிக்கைக்கு பாகிஸ்தான் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தை ஐ.நா. சபையின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளது.

இந்நிலையில், காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாதக் குழுக்கள் போராட்டத்தில் ஈடுபட்டன. காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்தனர். (ஐ)

# பாகிஸ்தானின் ஆதிக்கத்திலிருந்து நிலத்தை விடுவிக்க இந்தியாவின் ஆதரவு தேவை

## பலுசிஸ்தான் மக்கள் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் ஆதிக்கம் மற்றும் அதன் இராணுவக் கெடுபிடிகளில் இருந்து தங்கள் நிலத்தை விடுவிக்க இந்தியாவின் ஆதரவு தேவை என பலுசிஸ்தான் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பலுசிஸ்தான் மக்கள் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. குறித்த வாழ்த்து செய்தியிலேயே மேற்குறிப்பிட்ட விடயமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




குறித்த வாழ்த்துச் செய்தியில், "எனது இந்திய சகோதர சகோதரிகளுக்கு சுதந்திர தின வாழ்த்துக்கள். கடந்த 70 ஆண்டுகளில் நீங்கள் பெற்ற வெற்றி இந்தியர்களை பெருமைப்படுத்துகிறது. இன்று, இந்தியர்கள் உலகம் முழுவதும் பெருமையோடு வாழ்கிறார்கள்.

பலுசிஸ்தான் விடுதலைக்கு நீங்கள் குரல் எழுப்ப வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எங்களுக்கு உங்களின் ஆதரவு தேவை. "நன்றி ஜெய் ஹிந்த்" எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பலுசிஸ்தான் விடுதலைக்காக போராடும் மற்றுமொரு சமூக ஆர்வலரும் இந்த விடயத்தை இந்தியா அதிகாரபூர்வமாக உலகளவில் பேசவேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# காற்றை சுத்திகரிக்க செயற்கை மரம்!



(மெக்சிக்கோசிட்டி)

மெக்சிக்கோவைச் சேர்ந்த நிறுவனமொன்று காற்றை சுத்தப்படுத்தக் கூடிய செயற்கை மரங்களை வடிவமைத்துள்ளது.

இயற்கை மரங்களை வளர்ப்பதற்கு அதிக இடமும், நேரமும் தேவைப்படும் சூழலில், இத்தகைய ஒரு செயற்கை மரம் 368 இயற்கை மரங்களுக்கு இணையாக காற்றிலுள்ள கரியமில வாயு போன்ற மாசுக்களை நீக்கும் என குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

பயோஅர்பன் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மரங்கள், செயற்கையான வேதிவினைகள் மூலம் இயற்கைத் தாவரங்கள் மேற்கொள்ளும் ஒளிச்சேர்க்கையை மேற்கொள்வதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

அளவுக்கு அதிகமான காற்று மாசுபாட்டைக் கொண்டிருக்கும் மெக்சிக்கோ சிட்டி உள்ளிட்ட நகரங்களில் இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# தென்கொரியாவுடனா

## வடகொரியா

(பியாங் யாங்)

தென்கொரியாவுடனான உறவு முறிந்துள்ளதாக வட கொரியா அறிவித்துள்ளது.





தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவின் முற்றிலும் தவறான நடவடிக்கைகளே இருநாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முறிவுக்கு காரணம் எனவும் வட கொரியா சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில், நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வட கொரியா இரண்டு ஏவுகணைகளை சோதனை செய்துள்ளதாக தென் கொரிய இராணுவம்

# ஈரானிய எண்ணெய்க் சிறைபிடிக்கப்பட்ட இந்

(டெஹ்ரான்)

ஜிப்ரால்டரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈரானிய எண்ணெய்க் கப்பலில் பணியாற்றிய நான்கு இந்தியர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

குறித்த நால்வரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜிப்ரால்டரில் தடுத்து வைக்கப்பட்ட ஈரானிய எண்ணெய்க் கப்பலை விடுவிக்குமாறு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

## தொடர் குண்டுவெடிப்பு

# டென்மார்க்- சுவீடன் எல்லையில் பாதுகாப்பை பலப்படுத்துவோம்

## பிரதமர் உறுதி



(ஹொங்கொங்)

டென்மார்க்கின் சுவீடனுடனான எல்லைப் பிராந்தியத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்தப் போவதாக டென்மார்க் பிரதமர் மெட்பிரெடெறிக்ஸன் உறுதியளித்துள்ளார்.

கொப்பன்ஹேகலில் அண்மையில் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்தே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

அந்தத் தாக்குதல்கள் குறித்து சுவீடனைச் சேர்ந்த இரு ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தான் டென்மார்க்கை மிகவும் சிறந்த வழிமுறையில் பாதுகாக்க விரும்புவதாக மெட்பிரெ டெறிக்ஸன் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் மேற்படி குண்டு வெடிப்புடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் இளைஞர்களில் 22 வயதான இளைஞன் ஒருவனை பொலிஸார் டென்மார்க் எல்லைக்கு அணமையிலுள்ள சுவீடன் நகரான மல்மோவில் வைத்து பெரும் போராட்டத்தை எதிர்கொண்டு கைது செய்துள்ளனர்.

அதேசமயம் தலைமறைவாகியுள்ள இரண்டாவது சந்தேக நபரை கைது செய்வதற்கு சர்வதேச கைது ஆணையொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெளிநாடு

## ...னான உறவு முறிந்தது

### ...யா அறிவிப்பு

கொரிய பிராந்தியத்தில் அணு ஆயுதமற்ற நிலையை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையை



தெரிவித்துள்ளது.

ஒரு மாதத்துக்கும் குறைவான காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆறாவது பரிசோதனையாக இது கருதப்படுகிறது.

வட கொரியா சுமார் ஆறு நாட்களுக்கு முன்பு, இரண்டு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஜப்பான் கடல் பகுதியை நோக்கி ஏவியது.

மீண்டும் தொடங்குவதற்கு ட்ரம்ப் மற்றும் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன் இடையே கடந்த ஜூன் மாதம் நடந்த சந்திப்பில் உடன்பாடு எட்டப்பட்டிருந்த நிலையில், இந்தத் தொடர் ஏவுகணை பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜப்பானைத் தாக்கிய குரோசா புயல் ஆறு இலட்சம் மக்கள் வெளியேற்றம்

(டோக்கியோ)

ஜப்பானைத் தாக்கிய 'குரோசா' புயல் காரணமாக சுமார் 6 இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஜப்பானின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹோன்சு தீவில் ஹிரோஷிமா நகருக்கு அருகே உள்ள குரோ நகரினை நேற்று முன்தினம் வியாழக்கிழமை சக்திவாய்ந்த புயல் தாக்கியது.

இந்தப் புயலுக்கு 'குரோசா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. பலத்த காற்று காரணமாக ஆயிரக் கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்தன. வீட்டின் மேற்கூரைகள் தூக்கி வீசப்பட்டன. வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் உள்ளிட்ட வாகனங்களும் சேதமடைந்தன.

கனமழை காரணமாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதுடன், பல இடங்களிலும் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. வீதிகளில் பாறைகள் உருண்டு விழுந்தமை காரணமாக போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.



இதற்கிடையில் புயல், மழை காரணமாக ஹிரோஷிமா மற்றும் அதனை சுற்றி உள்ள நகரங்களில் சுமார் 700 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. மேலும் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டதால் ஷிகோகு மற்றும் ஜப்பானின் பிற பகுதிகளை இணைக்கும் படகு சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டன.

ஜப்பானில் தற்போது விடுமுறை காலம் என்பதால் உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு செல்லவிருந்த பயணிகள் 'குரோசா' புயலால் ஏற்பட்ட பயண குழப்பத்தால் பெரும் அவதிக்குள்ளாகி உள்ளனர். (ஐ)

## ...ய்க் கப்பலில் இந்தியர்கள் விடுதலை

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமைய குறித்த நால்வரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட நால்வரும், தங்களின் விடுதலைக்காக போராடிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

ஈரானிய மசகு எண்ணெயைத் தாங்கிய கிரேஸ் ஒன்று என்ற கப்பல் கடந்த ஜூலை மாதம் 4 ஆம் திகதி பிரித்தானிய ரோயல் கடற்படையால் தடுத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பறவைகள் மோதியதால் விமானம் தரையிறக்கம்

(மொஸ்கோ)

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் என்ஜின்கள் பழுதானதால் சாமர்த்தியமாக அருகிலுள்ள காட்டில் தரையிறக்கி 226 உயிர்களைக் காப்பாற்றியுள்ளார் விமானி. ரஷ்யாவின் மொஸ்கோவில் உள்ள ஜுகோஸ்கி விமான நிலையத்தில் இருந்து கிரிமியாவில் உள்ள சிம்பெரோ போலுக்கு யூரல் எயார்லைன் ஸுக்கு சொந்தமான ஏர்பஸ் 'ஏ321' விமானம் 226 பயணிகள் மற்றும் ஏழு ஊழியர்களுடன் புறப்பட்டது.

விமானம் புறப்பட்டு சிறிது நேரத்தில் பறவை ஒன்று விமானம் மீது பயங்கரமாக மோதியது. இதனால் இரண்டு என்ஜின்களும் பழுதாகின. அத்துடன் லாண்டிங் கியரும் வேலை செய்யவில்லை.




உடனடியாக விமான ஊழியர்கள் விமானத்தைத் தரையிறக்க வேண்டும் என்று கூறினர். இதனால் எதையும் பற்றி யோசிக்காமல் விமானி மக்காச்சோளம் காட்டில் அவசரமாகத் தரையிறக்கினார்.

தரையிறக்கும்போது 9 குழந்தைகள் உட்பட 23 பேர் காயம் அடைந்தனர். விமானியின் துணிச்சலான முடிவால் 226 பயணிகள் உயிர்தப்பினர். இது ஒரு மிரக்கிள் எமர்ஜென்சி லாண்டிங் என விமானிக்குப் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. (ஐ)

## ஹொங்கொங் எல்லையில் படையினரை குவிக்கும் சீனா

### வெளியாகின செய்மதி படங்கள்



(ஹொங்கொங்)

ஹொங்கொங்குடனான தனது எல்லையில் சீனா தனது படையினரை குவிப்பதை காண்பிக்கும் செய்மதிப் புகைப் படங்கள் வெளியாகியுள்ளன.

ஹொங்கொங் எல்லையில் உள்ள சென்ஜென் என்ற நகரில் உள்ள விளையாட்டரங்கில் சீனாவின் இராணுவ வாகனங்கள் பெருமளவில் காணப்படுவதை செய்மதிப்படங்கள் காண்பித்துள்ளன.

கடந்த இரண்டு வாரங்களிற்கு மேல் கடும் ஆர்ப்பாட்டங்களைச் சந்தித்து வரும் ஹொங்கொங்கிற்கு வடக்கே உள்ள உதைபந்தாட்ட அரங்கில் 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தயார் நிலையில் காணப்படுகின்றன.

மக்சார் டெக்னோலஜிஸ் என்ற விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் இந்த செய்மதி புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவலை சிஎன்என் னும் உறுதி செய்துள்ளது.

ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்து பதற்றநிலை அதிகரித்து வருகின்ற நிலையில் சீனா தனது எல்லையை நோக்கிப் படையினரை நகர்த்தி வருகின்றது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது டுவிட்டர் செய்தியில் சில நாட்களிற்கு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிரியாவில் இராணுவ விமானம் கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது

(டமாஸ்கஸ்)

சிரியாவில் இராணுவ விமானத்தை கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

சிரியாவில் 8 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரச படைகளுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரிட்டு வருகின்றனர்.

அதேபோன்று அரசுக்கு ஆதரவாக ரஷ்ய படைகள் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.



கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த பெரும்பாலான நகரங்களை ரஷ்யாவின் உதவியோடு அரச படைகள் மீட்டுள்ளன. எனினும் இட்லீப், வடக்கு ஹமா மற்றும் அலெப்போ மாகாணங்கள் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளன.

அவற்றை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து மீட்பதற்கு அரச படை போராடி வருகிறது. குறிப்பாக இட்லீப் மாகாணத்தை மீட்டெடுப்பதற்காக இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து சிரியா மற்றும் ரஷ்ய படைகள் அதிதீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந் நிலையில் இட்லீப் மாகாணத்திலுள்ள கான் ஷேக்கவுன் நகருக்கு அருகே பறந்து கொண்டிருந்த இராணுவ விமானத்தை கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

இராணுவ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை சிரிய இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. (ஐ)

# நாம் ஆதரவு வழங்கும் வேட்பாளர் அடிப்படைவாதத்தை அழிப்பார்

## ரத்ன தேரர் நம்பிக்கை

(இராஜகிரிய)

**ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு வழங்கும் வேட்பாளர் அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிப்பவராக இருப்பாரென நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நம்பிக்கை வெளியிட்டார்.**



இராஜகிரியவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "நான் உட்பட நாட்டைக் காக்கும் சிவில் அமைப்புக்கள் அனைத்தும் ஆதரவு வழங்கும் வேட்பாளர், அடிப்படைவாதத்தை தோற்கடிப்பவராகவும் ஷரீயா பல்கலைக்கழகத்தை அரசுடைமையாக்குபவராகவும் இருப்பார்.

இவ்விடயம் குறித்து எதிர்வரும் நாட்களில் வேட்பாளர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

மேலும் விரைவாக ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால் தான் தற்போதைய அரசாங்கத்தை துரத்தியடிக்க முடியும்.

அந்த வகையில் எதிர்வரும் தேர்தலில் மக்கள் சரியான பாடத்தைப் நிச்சயம் கற்பிப்பார்கள்" என தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.க. அனைத்துத் தேர்தல்களிலும் பாரிய பின்னடைவை எதிர்கொள்ளும்

## பந்துல எதிர்வுகூறல்



(கொழும்பு)

பொய் வாக்குறுதிகளால் ஐக்கிய தேசியக் கட்சி இனியொரு போதும் ஆட்சிக்கு வர முடியாது. அரசியல் ரீதியான தீர்மானத்தை நாட்டு மக்கள் தீர்மானித்து விட்டார்கள் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போதுள்ள பல ஜனாதிபதி வேட்பாளர்கள் மக்கள் மத்தியில் பல வாக்குறுதிகளை வழங்குகின்றனர். போலியான வாக்குறுதிகளால் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க முடியாது.

2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் நாட்டு மக்கள் செய்த தவறைத் திருத்திக் கொள்வதற்கு ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்துள்ளனர். இத்தேர்தலைத் தொடர்ந்து இடம்பெறும் அனைத்துத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய பின்னடைவை எதிர்கொள்ளும்.

பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை களமிறக்கியது சிறந்தது என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இதனை தொடர்ந்து அவர் எதிரணியின் பக்கம் வரவுள்ளதாக தகவல்களில் தெரியவந்துள்ளது. அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நெருங்கிய நண்பனும் இல்லை என்றும் பந்துல தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# சீரற்ற வானிலையால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தடுக்க கடற்படை குழு

(கொழும்பு)

மழையுடன் கூடிய வானிலை காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் இயற்கை அனர்த்தங்களையும் முன்கூட்டியே தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு கடற்படை குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



அதற்கமைய கடற்படையின் மெரின் படைப்பிரிவின் அவசர சிகிச்சை பிரிவு, மீட்டல் மற்றும் முதலுதவிப் பிரிவு, விசேட படகு சேவை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய கடற்படையினர் இந்தக் குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

அவர்கள் தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குழுவினர் நாடு முழுவதும் சேதமடைந்துள்ள பாலங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைக்கும் நடவடிக்கைகளை அண்மையில் முன்னெடுத்ததாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பக்தி

இராமர், லட்சுமனர், விசுவாமித்திரர் மூன்று பேரும் ஒரு இடத்திலே வந்து கொண்டிருந்தார்கள். ஜனகருடைய அழைப்புக்கு இணங்கி மிதிலாபுரிக்குப் பக்கத்திலே அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். வழியிலே குறுக்கே ஒரு நதி. அந்த நதியைத் தாண்டி அடுத்த கரைக்கு அவர்கள் போக வேண்டும். என்ன செய்யிறது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்திலே ஒருவர் அவர்கள் முன்னால் வந்து நின்றார்.


"யாரப்பா நீ?'' என்று விசாரித்தார்கள். "நான் ஒரு மீனவன். இந்த நதியிலே ஓடம் விட்டுக் கொண் டிருக்கிறேன்'' என்றான். "அதிலே எவ்வளவு பேர் ஏறலாம்'' என்றார்கள். "அறுபது பேர் ஏறலாம் '' என்றார். "நாங்கள் மூன்று பேர்தான் இருக்கிறோம்''. நீங்கள் மூன்று பேரும் மும்மூர்த்திகளுக்குச் சமமானவர்கள். உங்கள் மூன்று பேருக்காக மட்டுமே ஓடத்தை செலுத்துவேன். மற்றவர்களுக்காக காத்திருக்க வேண்டியதில்லை'' என்றான்.

"இருந்தாலும் 60 பேருக்குரிய கட்டணத்தை நாங்கள் கொடுத்து விடுகிறோம் என்றார்கள். "காசை விட உங்கள் ஆசிதான் எனக்குப் பெரிது'' என்றான் இவன். விசுவாமித்திரர் முதலிலே ஏறினார். அடுத்தபடியாக இராமர் ஏற முயற்சி செய்தார். ஆனால் ஓடக்காரன் ''காலை ஓடத்திலே வைக்காதீர்கள்'' என்று கத்தினான். லட்சுமனருக்கு பயங்கரமா கோபம் வந்துவிட்டது.

"என்ன இவன்? மூன்று பேரும் மும்மூர்த்திகள் என்றான். இப்ப இப்படி கத்துகிறான். சக்கரவர்த்தித் திருமகனைப் பார்த்தே இப்படி சொல்கிறானே! என்ன துணிச்சல் இவனுக்கு. ஏறி உட்காருங்கள். நான் ஓட்டுறேன் ஓடத்தை'' என்றார் லட்சுமனர். "தம்பி ஆத்திரப்படாதே'' என்று சொல்லிவிட்டு இராமர் அந்த ஓடக்காரனைப் பார்த்து "நான் ஏன் இதிலே ஏறக்கூடாது என்று சொல்கிறாய்? என்று கேட்டார். "ஐயா அந்த ஐயா வேணு மென்றால் ஓடத்திலே ஏறட்டும். நீங்கள் மட்டும் ஏற வேண்டாம் '' என்றான். "ஏன் அப்படிச் சொல்கிறாய் என்று கேட்கிறார்" இராமர்.

"இந்த நாட்டுக்கு ராஜா யாரு என்று தெரியுமா உனக்கு?'' என்கிறார். "நல்லாத் தெரியுமே! தசரத சக்கரவர்த்தியல்லவா'' என்கிறான். "அந்த தசரத ராஜகுமாரன்தான் நான். இது என் தம்பி'' என்கிறார். உடனே அவர்கள் காலிலே விழுந்து வணங்குகிறான் ஓடக்காரன். ''இதை முன்பே சொல்லியிருக்கக்கூடாதா? அது தெரியாமல் நீங்கள் யாரென்று கேட்டுவிட்டேன். இருந்தாலும் தங்களுடைய பாதத்தை மட்டும் ஓடத்திலே வைக்க வேண்டாம்'' என்கிறான். அந்த ஒரு விடயத்திலே மட்டும் அவன் பிடிவாதமாக இருக்கிறான்.

"அதுசரி நான் உன்னுடைய ஓடத்திலே ஏறினால் உனக்கு என்ன குறை உண்டாகும்?'' என்று கேட்கிறார். ஐயா நீங்கள் வருகிற வழியிலே ஒரு கல் இருந்தது. நான் கூட சின்னப் பிள்ளையாக இருந்தபோது அந்தக் கல்லிலே ஏறி சறுக்கு விளையாட்டு விளையாடினது உண்டு. நீங்கள் கல்லிலே கால் வைத்தவுடனே அந்தக் கல்லு பெண் ணாகிவிட்டது. இந்த ஓடத்திலேயும் கல்லு, மரம், இருப்பெல்லாம் இருக்கு. இதிலே நீங்கள் காலை வைத்தவுடனே இந்த ஓடமும் பெண்ணாகி விட்டது என்றால் நான் என்ன செய்வேன். இந்த ஓடத்தை வைத்துத்தானே நான் பிழைப்பு நடத்திக்கொண்டிருக் கிறேன் என்றான். இராமர் சிரித்தார். "சரி நாங்கள் அடுத்த கரைக்குப் போறது க்கு ஒரு வழி சொல்லு'' என்கிறார். "வேறு ஒன்றும் இல்லை. இந்த நதி நீரிலே உங்கள் காலை கழுவி விடுங்கள். உங்கள் காலிலே இருக்கிற கல்லை பெண்ணாக்குகின்ற அந்த மருந்து தண்ணி யிலே கரைந்து விடும். அதன்பின்பு எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை'' என்றான். 'சரி' என்று நதியிலே இறங்கினார். ''ஐயா காலை காலாலே தேய்த்து கழுவக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியும். அதனாலே அந்த வேலையை என்னிடம் விடுங்கள். உங்கள் காலை நானே என் கையாலே நல்லா தேய் த்து கழுவி விடுகிறேன் '' என்றான். 'சரி' என்றார் இராமர். செப்பு தாம்பாளத்திலே இராமர் நிற்கிறார். இவன் நதி நீரை எடுத்து அபிஷேகம் செய்கிறான். "இராமா உன்னுடைய பாத பூஜைக்கு பெரிய பெரிய முனிவர்கள் எல்லாம் பலகாலம் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். தவமே செய்யாத இந்த ஏழை மீனவ னுக்கு அந்தப் பாக்கியம் முதலிலே கிடைத் திருக்கே'' என்று சொல்லி ஆனந்தக்கண்ணீர் விட்டான். "பாத பூஜை செய்யிறதுக் காகத்தான் இவன் என்னை ஓடத் திலே ஏற்ற மறுத்தான். இவன் பரமபக்தன்'' என்று தம்பியிடம் சொல்கிறார் இராமர். அதன்பின்பு எல்லோரும் ஓடத்திலே ஏறி அக்கறைக்கு வந்து சேர்ந்தார்கள். ஓடத்தை விட்டு இறங்கி யவுடன் இராமர் தன் விரலிலே இருந்த நவரத்தின மோதிரத்தை அவனிடம் கொடுக்க வந்தார். "ஐயா நான் சின்ன ஓடக்காரன். நீங்கள் பெரிய ஓடக்காரன். ஒரு தொழிலாளியிடமிருந்து இன்னொரு தொழிலாளி இனாம் வாங்கக் கூடாது'' என்றான். "என்னது எங்கள் அண்ணன் ஓடக் காரனா?'' என்று கோபப்பட்டார் லட்சுமனர். "ஆமாம் நான் இந்த சின்ன ஆற்றிலே உங்களை கரை சேர்க்கிற ஓடக்காரன். ஆனால் நீங்கள் பிறவி என்கிற பெருங் கடலிலே தத்தளிக்கிற ஆன்மா க்களை முக்தி என்கிற கரையிலே சேர்க்கிற பெரிய ஓடக்கா ரன். நம்ம ஆள் ஒருத்தர் இந்தக் காலத்திலே ஒரு ஆற்றைக்கடக்க வேண்டியிருந்தது. ஓடத்திலே கால் வைக்கப் போனார். ஓடக்காரன் உங்க பாதம் என் ஓடத்திலே படக்கூடாது என்றான். இவருக்கு மிகவும் பெருமையாக போய்விட்டது. "ஏனப்பா என் காலை நீ கழுவ வேண்டும் என்று ஆசைப்படு கிறாயா?'' என்றார். அவன் நிமிர்ந்து பார்த்தான். "மூன்று மாதமா உன்னை கடனுக்கே கரை சேர்த்துக் கொண்டிருக்கிறேன். பழைய பாக்கியை செட்டில் பண்ணினா த்தான் இன்றைக்கு என் ஓடத்திலே உன்னை கால் வைக்க விடுவேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதே'' என்று சொல்லி அவர் காலிலே விழுந் தான். இது ஒருவிதமான பக்தி.




நல்லூர்க்கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)




### நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

# கந்தபுராண எழுச்சி விழா பன்னிரெண்டாம் நாள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா நிகழ்வின் 12 ஆம் நாள் நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் இந்துக் குருமார் ஒன்றிய உறுப்பினர், பிரம்மஸ்ரீ ஜ.ஸ்ரீவக்சன் சர்மா ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் பணிப்பாளர் வே.பிறேமச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவ சித்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி திருமதி.விக்னேஸ்வரி பவநேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காரைநகர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிழவன் காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை, தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலை மற்றும் திக்கரை இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் ஏ.அனுசாந்தனின் "உமாதேவியார் திருமணம்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன, உற்சவகாலப் பன்னிரெண்டாம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களின் "பல்லியம்" இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறும். (இ-5)

# பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில், இன்றைய உற்சவ தினத்தை முன்னிட்டு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாவற்கட்டு அந்திக்குளி ஞானவைரவர் ஆலயக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறும். (இ-5)

# தெய்வீக இசையரங்கின் பன்னிரெண்டாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் பன்னிரெண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் இசைக் கச்சேரி வயலின் இசை என இரு நிகழ்வுகள் இடம்பெறும். இசைக்கச்சேரியில் பாட்டு-விந்துகா தவராசா, வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-ப.விக்கேஸ்வரன், கெஞ்சிரா-ச.ஜெனில் சங்கர் ஆகியோரும் வயலின் இசையில் வயலின்- சைந்தவி நிஷாகரன், உடன் வாசிப்பவர்-மதுரா பாலச்சந்திரன், மிருதங்கம்-ம. லோகேந்திரன், தவில்-ந.பாலகிருஷ்ணன் ஆகியோரும் பங்கேற்பர். (இ)

# இந்தியாவின் 73 ஆவது சுதந்திரதினம்

(கொழும்பு)

இந்தியாவின் 73 ஆவது சுதந்திரதினம் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து இந்தியத் தேசியக்கொடியை ஏற்றிய பின்னர் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். (இ-7)




## வரம் தருவான் கந்தன்

நல்லூரிலே வீற்றிருக்கும்
பச்சை மயில் வாகனனே
ஆறுமுகம் காண
ஓடோடி வந்த நம் உறவுகளை
எத்தனை தடைகள் தாண்டி
உன் கோயில் சரணடைந்தோம் முருகா
அத்தனை தடைகளும்
உன் திருமுகத்தை பார்த்தவுடன்
ஆறுதல் வந்ததே முருகா

*இடைக்காடு*
*து.துளசி.*

## கள்ளமில்லா உள்ளங்களில் குடியிரப்பா குமரா!

நாடியே வருபவர்க்கு நலம் பலவே புரியும்
நல்லூரில் குடி கொண்ட நாயகனே!
தேடியே வந்து உன்னை தினம் தினம் வணங்கும் அன்பர்
தேவைகளை நிறைவேற்று சேவற் கொடியோனே!

உந்தனையே சிந்தைதனில் நினைத்து வரும் அடியவரின்
உள்ளத்து வேதனையை உணர்ந்து நீயும் தீராயோ!
கந்தனையே தஞ்சமென சரணடையும் பக்தர்களின்
கள்ளமில்லா உள்ளங்களில் குடியிரப்பா குமரா!

*திருமதி.உ.பூமணி*
*வடலியூர்.*

## கூவ வேண்டும் சேவல்

நல்லைக் கந்தா உன் எழில் காண எம்மனதில் ஆவல்
எமக்கு இடர் ஏற்படாமல் நீயே என்றும் காவல்
சூரன் மீது வேலை ஏவினாயே ஒரு ஏவல்
அன்று நீ ஔவைக்கு வழங்கிய கனியோ நாவல்
எமக்கு விடிவு வரவேண்டும் எனக் கூவவேண்டும் சேவல்

*கதிர் மனோகரன்*
*மயிலிட்டி.*

## முத்துக் குமரனே போற்றி

கடம்பா உந்தன் கருணைக்கு எல்லையேது
கந்தனே உன்னை தொழுதிடா கரமேது
வரமது அருளும் குமரனுக்கு இணையேது
வள்ளி மணாளன் அழகிற்கு ஈடேது

தேவாதி தேவனே உன்னடி போற்றி
தேவர்கள் சேனாதிபதியே போற்றி போற்றி
விமலன் அதிசயப்பட செய்தவனே போற்றி
வெற்றி வேலாயுதனே போற்றி

*ஜசந்தினி அரியாலை*

## சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

மாசும் மறு வில்லா நறு
மனமே குகன் கோயில்
பேசு மடி யார்கள் மிடி
போக்கு மவன் வாயில்
காசும் பணத் தேசு, மிவை
காட்டிப் பெற மாட்டா
நேசன் முரு கேசன் திரு
நல்லைக் குமரோனே!

*கலாபூஷணம்,*
*சந்தக்கவிஞர். நவ. பாலகோபால்*

# அரச காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான கேள்வி பதில்கள்



12

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

மேற் குறிப்பிட்ட காரணத்தின் மீது குத்தகை ஒன்று செல்லுபடியற்றதாக்கப்படுகின்றவிடத்து செல்லுபடியற்ற தாக்கப்படுகின்றதான கூற்றொன்றை குத்தகை ஒப் பந்தத்தில் இட்டு குத்தகையை செல்லுபடியற்றதாக்கும் தத்துவம் பிரதேச செயலாளருக்கு உண்டு. அப்படி யிருந்தபோதும் எதிர்பார்த்த செல்லுபடியற்ற தாக்குகை க்கு எதிராக 16 ஆம் இலக்க அரச காணிகள் ஒழுங்கு விதிகளின் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் காரணங் காட்டுவதற்காக அத்தகைய குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் அறவிடப்பட வேண்டியுள்ள ஆளுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படும் வரையில் மேற்குறிப்பிட்ட வாறான குறிப்பீடு செய்யப்படுதல் ஆகாது.

அவ்வாறு அறவிடப்பட வேண்டியுள்ள தொகைகள் செலுத்தப்படுமானால் அவ்விடயம் தொடர்பாக தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகை ஒப்பந்தத்தின் மூலப்பிரதியை பெற முடியாத விடத்து அக் குத்தகை ஒப்பந்தத்தின் பிரதேச செயலாளர் செயல கத்தின் பிரதியில் செல்லுபடியற்றதாக்குவது பற்றிய குறிப்பீட்டைச் செய்யலாம். காணியை ஆட்சி செய்யும் அல்லது அங்கு குடியிருக்கும் குத்தகைக் கொள்வனவுக் காரர் அல்லது வேறு எத்தகைய எவரேனும் ஆள் 88, 89 ஆம் பிரிவுகளின் கீழ் குறுக்கு முறையில் வெளி யேற்றப்படலாம்.

11. எத்தகைய குத்தகை ஒப்பந்தத்தின் கீழும் அரசாங்கத்தால் அறவிடப்பட வேண்டியுள்ள பணம் (சுருக்க முறை ஒன்றில்) எதனையும் வழக்கு நடவடிக்கை மூலம் பெற்றுக் கொள்வதற்கு 85 ஆம், 86 ஆம் பிரிவுகளினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

12. விருப்புத் தெரிவிப்பின் மீதோ அன்றி நீதிம ன்றத் தீர்ப்பின் மீதோ அல்லது கட்டளைச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் பிரதேச செயலாளரினாலோ குத்தகை ஒப்பந்தமொன்று செல்லுபடியற்ற தாக்கப்பட்டுள்ளபோது.

**(i)** குத்தகைக் கொள்வனவுக்காரரை காணியி லிருந்து வெளியேற்றி அரசாங்கத்தின் சார்பாக அதன் ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கும்,

**(ii)** முறையாக வழங்கப்பட்டுள்ள குத்தகை ஒன் றாயின் செல்லுபடியற்றதாக்குகையை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கும்,

**(iii)** காணி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித் தல் செய்வதற்கும்,

**(iv)** குத்தகை ஒப்பந்த வரைபடமொன்று அல்லது குத்தகை ஒப்பந்த கோட்டு வரைபடம் ஒன்று வழங்கப் பட்டிருந்தால் நில அளவையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் செய்து குத்தகை ஒப்பந்த வரைபட மொன்றையோ அல்லது குத்தகை கோட்டு வரைபட த்தையோ செல்லுபடியற்றதாக்குவதற்கும்,

**(v)** ஆரம்ப வரைபடம் அல்லது இறுதிக் கிராம வரைபடம், காணியின் விபரப் பட்டியல் ஆகியவை களின் எல்லாப் பிரதிகளிலும் குத்தகை ஒப்பந்தப் பதி வேட்டிலும் கோப்பிலும் செல்லுபடியற்றதாகுக பற்றிய குறியீடொன்றை இட்டு வைப்பதற்கும் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**(vi)** நில அளவையாளர் நாயகம் நில அளவை அத்தியட்சகரின் வரைபடப் பிரதிகளில் குறிப்பதற்காக இந்த விபரங்களை அனுப்ப வேண்டும்.

13. அரசாங்க குத்தகைக் கொள்வனவுக்காரர் ஒருவருக்கு தமது உரிமையை அடைவு வைப்பதற்கு வசதியளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அடைவுக்கார ருக்கு உரிய கால அவகாசம் வழங்கப்படாமல் குத்தகை ஒப்பந்தம் ஒன்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் ஆகாது. குத்தகை கொள்வனவுக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு சட்டமா அதிபரை வேண்டுகின்றபோது அடைவுக்காரருக்கு எவ்வளவு கால அவகாசம் வழங்கப்பட்டதென்பதையும் பிரதேச செயலாளரானவர் குறிப்பிடல் வேண்டும்.

**கேள்வி-38:-** 2015 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் பிரகாரம் அரச காணிகள் கட்டளைச் சட் டத்தின் கீழ் வதிவிடத்திற்காக நீண்டகாலக் குத்தகை யில் அரச காணி பெறப்படும்போது அறவிடப்படும் குத்தகைப்பணம் எவ்வளவ?

**பதில்:-** 2015-1-1 லிருந்து நகரங்கள் அல்லது அதிக அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களில் வதிவிடத்திற்காக நீண்ட காலக் குத்தகையில் அரச காணி மக்களுக்கு வழங்கப்படும்போது பின்வரும் முறையில் குத்தகைப்பணம் அறவிடப்படும்.

குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 300,000/= வுக்கு குறைவாயின் குத்தகைப்பணம் ரூபா 1000/= அல்லது காணியின் அபிவிருத்தி அடையாத பெறு மதியின் 0.5%. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 300,000/= மேலும் ரூபா 400,000/=வரையும் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 0.5%. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 400,000/= மேலும் ரூபா 500,000/= வரையும் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1 %. குடும்பத்தின் வருட வருமானம் ரூபா 500,000/= மேலும் ரூபா 600,000/= வரையும் காணியின் அபிவிருத்தி அடையா பெறுமதி யின் 2%. குடும்பத்தின் வருட் வருமானம் ரூபா 600,000/= மேலாயின் காணியின் அபிவிருத்தி அடையாதபெறுமதியின் 4%. காணியை வழங்குவத ற்கு நபர் தெரிவு செய்யப்பட்ட திகதியில் நிலவிய அபிவிருத்தி அடையாத பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு குத்தகை கணிக்கப்படும். இச் சுற்றறிக்கையில் மேலும் சில சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இச் சுற்றறிக்கையில் ஏதும் நிலுவைப் பணம் இருப்பின் அவை அறவிடப்படமாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளது.

**கேள்வி-39:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத் தின் கீழ் விசேட முதலீட்டு அபிவிருத்தி திட்டங்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் அரச காணிகளை வழங்கும் வழிமுறை என்ன?

**பதில்:-** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டா ளர் இலங்கையில் நேரடியாக முதலீடு செய்ய உற்சாகப் படுத்தும் நோக்குடன் விசேட முதலீட்டு அபிவிருத்தி திட்ட ங்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் அரசகாணி களை வழங்கும் திட்டம்காணி ஆணையாளர் நாயகத்தால் 2012-10-18 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2012/06ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் நடைமுறைக்கு வந்தது.

அச் சுற்றறிக்கை 2015-12-30ஆம் திகதி வெளியிடப் பட்ட 2015/07ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்த ப்பட்டது. இச் சுற்றறிக்கையில் பின்வருவன விசேட முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்களாக கூறப்பட்டுள்ளன.

1. அமைச்சரவையால் அனுமதியளிக்கப்பட்ட அல்லது அமைச்சரவை உப குழுவால் அனுமதியளிக்கப்பட்ட அல்லது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழுவால் அனுமதியளிக்கப்பட்ட முதலீட்டு அபிவிருத்தி திட்டங்கள்.
2. முதலீட்டுச் சபையால் அனுமதியளிக்கப்பட்ட முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள்.
3. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட கைத்தொழில் வலயத்தினுள் வரும் முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள்.
4. எரிசக்தி அதிகாரசபையினால் அனுமதிய ளிக்கப்பட்ட சிறியதர மின் உற்பத்தி திட்டங்கள்.

இவ் விசேட முதலீட்டு அபிவிருத்தி திட்டங்களுக்கு 1974 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச காணிச் சட்டத் தில் கூறப்பட்டுள்ள விசேட செயற்றிட்டங்களுக்கு அரச காணி வழங்கும் ஏற்பாடுகளுக்கமைவாக இரு வழிகளில் அரச காணிகள் வழங்கப்படுகின்றன. அவையாவன

1. அரச காணிகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்கல். குத்தகைக் காலம் 30-99 வருடங்கள் வரை.
2. காணி அளிப்பு மூலம் உறுதி வழங்கல். **(Offer freehold title through a grant)**

இது பற்றிய விபரம் மிகவும் தெளிவாக காணி ஆணையாளர் நாயகத்தின் 2015/07ஆம் இலக்க சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கேள்வி-40:-** வேறேதும் காணிகள் 99 வருட நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்படுகின்றனவா?

**பதில்:-** ஆம். காணிச் சீர்திருத்த ஆணைக்கு ழுக்குச் சொந்தமான காணிகள் 99 வருட நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்படுகின்றன. உதாரண மாக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுக்குச் சொந்த மான பல தேயிலை மற்றும் இறப்பர்தோட்டங்களை JEDB 99 வருட நீண்ட கால குத்தகைக்கு எடுத்துள்ளது.

**கேள்வி-41:-** வனத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்க முடியுமா?

**பதில்:-** இல்லை நீண்ட கால குத்தகைக்கு வழங்க முடியாது.. ஆனால் வனத் திணைக்களம் அதற்குச் சொந்தமான காணிளை வருடாந்தம் புதிப் பிக்கக் கூடிய அனுமதிப்பத்திரத்திற்கு விடுவிக்க முடியும். மேலும் கட்டாய இயற்கை ஒதுக்கீடுகளை **(Strict Natural Reserves)** வருடாந்த அனுமதிப் பத்திரத்திற்கு விடுவிக்க முடியாது.

**கேள்வி-42:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மக்களின் குடியிருப்புக்காக அரச காணிகள் தற்போ தும் நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்படுகின்றனவா?

**பதில்:-** வதிவிடத் தேவைக்காக அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணிகள் நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட வதிவிடக் குத்தகை முறிகளை அளிப்புப் பத்திரங்களாக **(grants)** ஆக மாற்றமுடியும். இவ் இருபடிகளும் காலம் நீண்டதும் சிக்கலானதுமாகும். இச் சிக்கலையும் காலத்தையும் குறைப்பதற்கு 2015.12.30 ஆம் திகதி காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் 2015/09 இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அச் சுற்றறிக்கையின் பிரகாரம் நீண்ட காலக் குத்தகைக்குப் பதிலாக அளிப்புப் பத்தி ரங்கள் **(grants)** வழங்கப்படும். அதில் கூறப்பட்டு ள்ள விடயங்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

ஒருவர் ஒரு அரச காணியை அபிவிருத்தி செய்து அதில் வீடுகட்டி வசித்துவருபவராக இருந்து

- 10 வருட காலத்திற்கு மேலாக கூறப்பட்ட அரச காணியை நீண்ட காலக் குத்தகைக்கு வழங்க தெரிவு செய்யப்பட்டு இற்றைவரையில் அக் காணியை நீண்ட காலக் குத்தகைக்கு வழங்க அனுமதிக்கப்படாமல் இருந்தால். அல்லது
- நீண்ட காலக் குத்தகை அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து அக் குத்தகைக் காலம் 10 வருடத் திற்கு மேலாக இருப்பின் அல்லது
- நீண்ட காலக் குத்தகை முறி வழங்கப்பட்ட திகதியிலிருந்து அக் குத்தகைக் காலம் 5 வருடத்திற்கு மேலாக இருப்பின் அவர்கள் விரும்பின் அவர்கள் நேரடியாக அளிப்புப் பத்திரத்தை **(grant)** பெற முடியும். அவர்கள் அரசுக்கு கொடுக்கவேண்டிய எல்லாக் கொடுப்பனவுகளும் செய்து முடித்தபின் அவர்களுக்கு அளிப்புப்பத்திரம் **(grant)** வழங்கப்படும். அவர்கள் அளிப் புப் பத்திரம் **(grant)** பெற விரும்பாவிடின் அவர்களுக்கு குத்தகை முறிகள் வழங்கப்படும். அவர்கள் இதனை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**(முற்றும்)**

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2019-17.09.2019

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## கண்டகச் சனி பலம் பெறுகிறது



விகாரி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சகாய ஸ்தானாதிபதி சூரியன், பஞ்சம விரயாதிப தியான சுக்கிரனோடும், 6, 11 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியான செவ்வாயோடும் இணைந்து சகாய ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார்.

ஒரு கிரகம் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நற்பலன்களை அள்ளி வழங்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது சுப விரயங்கள் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் அகலும். புதிய பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். இதுவரை வேலை கிடைக்காதவர்களுக்கு நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும். ஓய்வில் வெளி வந்தவர்களுக்கு, சுய தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வீடு மாற்றங்களும் இடமாற்றங்களும் நன்மை தரும் விதத்தில் அமையும். பணப் புழக்கம் சிறப்பாகவே இருக்கிறது. பகையாக இருந்த உறவினர்கள் மனம் மாறி உங்களைத் தேடி வரக்கூடும். நகை வாங்குவது, வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். குரு பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால், 'நீண்ட நாட்களாக இல்லத்தில் மங்கல ஓசை கேட்கவில்லையே' என்ற கவலை இனி மாறும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் இனி வெற்றி கிடைக்கும்.

ஜென்மத்தில் ராகுவும் 7 இல் கேதுவும் இருப்பதால் நாக தோஷம் உங்களை ஆட்கொண்டுள்ளது. எனவே ஒரு சில சமயங்களில் இனம்புரியாத கவலைகள் ஏற்படலாம். இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள், வாகன மாற்றங்கள் போன்றவை தானாக நடைபெறும். ஒரு சிலருக்கு வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

நீண்ட நாட்களாக வக்கிர இயக்கத்தில் இருந்த சனி பகவான், செப்டெம்பர் 2 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். வக்கிர நிவர்த்திக்குப் பிறகு, கண்டகச் சனி மிகுந்த பலம்பெறுகிறது. எனவே மாதத்தின் பிற்பகுதியில் மிகுந்த கவனத்தோடு செயற்பட வேண்டியது அவசியம். விரயங்கள் அதிகரிக்கும். விரும்பத்தகாத செயல்கள் நடைபெற்று மனக்கவலை உண்டாகும். சிறப்புப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. மேலும் ஆவணி சதுர்த்தியில் ஆனைமுகப் பெருமானை வழிபட்டால் உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். தெளிந்த சிந்தனை உருவாகும்.

**சிம்ம புதனும், கன்னி புதனும்**

ஓகஸ்ட் 21 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். இராசிநாதன் சகாய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரத்தில், நீங்கள் நினைத்தது நிறைவேறும். நீண்ட நாளாக இருந்து வந்த நோயில் இருந்து நிவாரணம் பெறு வீர்கள். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். புத-ஆதித்ய யோகம் செயற்படுவதால் பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். செப்டெம்பர் 7 ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் சென்று உச்சம் பெறுகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். இராசிநாதன் மிகுந்த பலம் பெறும் இந்த நேரம் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். யோக வாய்ப்புகள் ஒவ்வொன்றாக வந்து சேரும்.

**சனி வக்கிர நிவர்த்தி**




தனுசு இராசியில் சஞ்சரிக்கும் சனி, செப்டெம்பர் 2 ஆம் திகதி வக்கிர நிர்த்தியாகிறார். கண்டகச் சனி பலம் பெறும் இந்த நேரத்தில் கொஞ்சம் கவனமுடன் செயற்பட வேண்டும். வளர்ச்சியில் குறுக்கீடுகள் வரலாம். உங்களுக்கு வரவேண்டிய ஆதாயம் மற்றவர்களுக்குப் போய்ச் சேரும். சிந்தனைகள் வெற்றி பெறுவது அரிது. தேகநலனும் பாதிக்கப்படலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பிறருக்கு பணப்பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் உருவாகலாம். நண்பர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பகைவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் நேரம் இது. மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம்.

**நீச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

செப்டெம்பர் 10ஆம் திகதி கன்னி இராசிக்கு செல்லும் சுக்கிரன், அங்கு நீச்சம் அடைகிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் நீச்சம் பெறுவதால், பிள்ளைகளின் குணங்களில் மாறுபாடுகள் ஏற்படலாம். ஒரு சிலருக்கு பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். ஆகையால் கூடுமானவரை பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. 'பூர்வீக இடத்தை விற்று விட்டு புதிய இடங்கள் வாங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். பயணங்கள் பலன் தரும். நீங்கள் நினைத்தபடியே வெளிநாட்டு யோகம் கைகூடும்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை விரதம் இருந்து அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் தனவரவு தாராளமாக நடைபெறும். குணம் மாறி விலகிச் சென்ற உறவினர்கள் மீண்டும் வந்து சேருவர். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து பாராட்டுப் பெறுவீர்கள். அவ்வப்போது பிரச்சினைகள் வந்தாலும், கணவன் - மனைவி இடையே பாசமும், நேசமும் அதிகரிக்கும். கண்டகச் சனி ஆதிக்கம் பலம்பெறுவதால் கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. குடும்பப் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

பெற்றோர்களின் உறவில் ஏற்பட்ட விரிசல் மாறும். சகோதர ஒத்துழைப்பு உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் காரணமாக இடமாற்றங்கள் வந்து சேரலாம். அதேநேரம் விரும்பிய இடம் கிடைப்பது அரிது. சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லுங்கள். வீடு வாங்கும் யோகம் உண்டு. வராகி வழிபாடு வலிமை சேர்க்கும்.

## துணிந்த முடிவு வெற்றி தரும்



விகாரி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசி நாதன் சூரியன் இராசியிலேயே சஞ்சரிக்கிறார்கள். அவரோடு யோகாதிபதி செவ்வாயும், 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரனும் சேர்ந்து சஞ்சரிக்கிறார்கள். இப்படிப்பட்ட அமைப்பில் மாதம் தொடங்குவதால் இம்மாதம் உங்களது எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறை வேறும்.

வக்கிர நிவர்த்தியான குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே தொழிலில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்படும். செய்யும் முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெறும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் இப்பொழுது படிப்படியாக நீங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஓய்வில் வெளி வந்து தனித்து தொழில் செய்யும் வாய்ப்பு உருவாகலாம்.

தொழில் ஸ்தானத்தை குரு பார்க்கும் அமைப்பும், லாபஸ்தானத்தில் ராகு வீற்றிருக்கும் அமைப்பும், இராசிநாதன் சூரியன், யோகாதிபதி செவ்வாயுடன் இணைந்து இராசியிலேயே சஞ்சரிக்கும் சூழ்நிலையும் இம் மாதம் ஏற்படுவதால், புதிய ஒப்பந்தங்களும் வந்துசேரும். புதிய தொழில் வாய்ப்பும் கைகூடும். 'வாங்கிப் போட்ட முதலீடுகளுக்கு வட்டி கட்டி, வட்டிகட்டி வாட்டம் அதிகரிக்கிறதே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது மிதமிஞ்சிய பொருளாதாரம் வந்து குவியப் போகிறது. 'குடும்பத்தில் நீண்ட நாட்களாக மங்கல ஓசை கேட்கவில்லையே' என்று கவலையடைந்தவர்கள், இப்பொழுது சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மகிழ்ச்சி காணப் போகிறார்கள். பொதுவாக தடைகற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும் நேரம் இது. தைரியமும், தன்னம்பிக்கையும் மிக்க நீங்கள் துணிந்து எடுத்த முடிவுகளால் துயரங்களை வெளியேற்ற வழிவகுத்துக் கொள்வீர்கள்.

இம்மாதம் ஆவணி சதுர்த்தியில் ஆனை முகப்பெருமானுக்கு விழா எடுத்துக் கொண்டாடுவர். அந்த விழாவில்

கலந்துகொண்டு விருப்பத்தோடு விநாயகரை வழிபட்டால் நல்ல திருப்பங்கள் ஏற்படும். அதுமட்டுமல்லாமல் தன லாபாதிபதியான புதனும், யோகாதிபதியான செவ்வாயும் வலிமை இழந்திருப்பதால் அதற்குரிய வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது. மகாலட்சுமி வழிபாடும், மால் மருகன் வழிபாடும் தடைகளை அகற்றும்.

**சிம்ம புதனும், கன்னி புதனும்**

ஓகஸ்ட் 21 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, போதுமான வருமானம் வந்துசேரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆதரவுக் கரம் நீட்ட அருகில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் அரசியல்வாதிகளும் உறுதுணையாக இருப்பார்கள். தொலை தூரப் பயணங்களால் நன்மை கிட்டும். சகோதரர்கள் தங்கள் வாக்குவாதங்களை மறந்து இணைந்து செயற்படத் தொடங்குவர். ஒருசிலருக்கு வெளிநாட்டு ஒப்பந்தங்கள் அமையலாம். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மறையும். சேமிப்பு அதிகரிக்கும். செப்டெம்பர் 7 ஆம் திகதி கன்னி இராசிக்கு செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். இது ஒரு பொற்காலமாகும். என்ன நினைக்கிறீர்களோ, அதை உடனடியாக செய்து முடிப்பீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் வாய்ப்பு உருவாகும்.

**சனி வக்கிர நிவர்த்தி**

இதுவரை தனுசு இராசியில் வக்கிர இயக்கத்தில் இருந்த சனிபகவான், செப்டம்பர் 2 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே பிள்ளைகள் வழியில் ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறப் போகிறது. பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். வங்கி கடன்களை முறையாக முடிக்கும் வாய்ப்பு உருவாகும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். புதிய வாகனங்கள் வாங்க வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த தொகை வந்து சேரும். பெண் பிள்ளைகளின் கல்யாண முயற்சிகளில் இதுவரை இருந்த தடை அகலும். சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.




**நீச்ச சுக்ரன் சஞ்சாரம்**

செப்டெம்பர் 10ஆம் திகதி கன்னி இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். அது சுக்கிரனுக்கு நீச்ச வீடாகும். இருப்பினும் நீச்சன் நின்ற இராசிநாதனான புதன் அந்த இராசிக்குள் உச்சம் பெற்று நீச்ச பங்க இராஜயோகத்தை உருவாக்குகிறார். எனவே கவலைப்படத் தேவையில்லை. தொழில் சீராக நடைபெறும். மனபயம் ஓரளவு ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நட்பால் நன்மைகளும், ஏற்றமும் வந்து சேரும். பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தங்கம், வெள்ளி மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. நிலம் விற்பனையால் கனிசமான தொகை கைக்கு வந்துசேரும். இம்மாதம் துர்க்கை வழிபாடு உங்கள் துயரங்களைப் போக்கும்.


**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதார மேம்பாடு அதிகரிக்கும். சென்ற சில மாதங்களாக நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்பட்டு பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். பெற்றோர்களின் ஆதரவும், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும் திருப்திகரமாக இருக்கும். வீடு, இடம், வாங்கும் யோகம் உண்டு. மேலும் கட்டடங்களை பராமரிக்கும் வாய்ப்பு கிடைக்கும். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்கள் இப்பொழுது நல்லவிலைக்கு விற்று, அதன் மூலம் வரும் தொகையைக் கொண்டு தொழிலை விரிவு செய்யும் எண்ணம் ஈடேறும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உத்தியோக முன்னேற்றமும், ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடி அமையும். குரு வழிபாடும், முருகப்பெருமான் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

# புகையிரதக் கடவைகளில் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்கான வழிமுறைகள்

1990 இல்தடைப்பட்ட வடக்கு மார் க்க புகையிரத சேவைகள் மீண் டும் 2014 இல் புத்துயிர் பெற் றதிலிருந்து இன்றுவரை அதிக ளவான உயிர்களையும் சொத் துக்களையும் அழிக்கும் விபத்துப் பகுதியாக காணப்படு வது ஏன்? எனும் கேள்விக்கும் அதனை இழிவளவாக்குவதற் கான வழிவகைகளையும் விழிப் புணர்வுகளையும் பொது மக்க ளிடம் கொண்டு சேர்ப்பது சமூகப் பொறுப்பாகும்.



நாளொன்றிற்கு 8-10 சேவைகளை மட்டுமே கொண்ட வடக்கு மார்க்க விபத்துக்கள் 80 ற்கும் மேற்பட்ட சேவைகளைக் கொண்ட தெற்கு மார்க்க விபத்துக் களோடு ஒப்பிடுகையில் பார தூரமான வித்தியாசத்தைக் கொண்டவை.

அந்தவகையில் காப்பெற் வீதிகளால் அதிகரித்த விபத்துக் களைப் போன்றே இதுவும் 25 வருடங்கள் பாவனையில் இல் லாதிருந்ததாலும் ஏற்பட்ட விபத்து க்கள் என்று வெறுமனே கூறி விட இயலாது. ஆனாலும் வட பகு தியை விட ஒப்பீட்டளவில் ஏனைய ரயில் மார்க்கங்களில் மனித மற் றும் கால்நடைகளின் விபத்து வீதம் குறைவானதென்பது உண் மையே. இதற்கான பொறுப்புக் களை வெறுமனே ரயில்வே மீது மட்டும் சுமத்திவிட்டு பொது மக்கள் கடந்து விட முடியாத ஒன்றாகும். ஏனெனில் புகையிரதங்களால் அதன் பாதையில் மட்டுமே பய ணிக்க முடியும். அதன் பாதையை குறுக்கிடும் நாமே அதீத கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவாக ரயில்வே கடவை கள் இலங்கையில் மூன்று வகை யாக அமைந்திருக்கின்றன. அதில் முதலாவது வகையை தவிர மற் றைய இரண்டும் பாதுகாப்பு குறைந்த கடவைகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை நாட்டில் அனைத் தையும் பாதுகாப்பான கடவை யாக்க முடியாதென்பது பொரு ளாதார செலவினங்களை அதி கப்படுத்தும் என்பதாலேயே 03 வகையான கடவைகள் பாவனை க்கு விடப்படுகின்றன.

1.புகையிரத நிலையத்தோடு அமைந்த பாதுகாப்பான கடவை (level crossing)

2. ஒளிச்சமிக்ஞை கட்டமைப் புடனான தானியங்கி ஒலிச்சமி க்ஞை கடவை (Bell & Light)

3.மூங்கில்கடவை(Bamboogate)

**புகையிரத நிலையத்தோடு அமைந்த பாதுகாப்பான கடவை (Level Crossing)**

இவை சமமான வீதியோடு இணைந்து பாதுகாப்பாக அமை ந்திருக்கும்.புகையிரத நிலையத் திலிருந்து கட்டுப்பாட்டை பெற்று ஊழியர் ஒருவர் அருகிலிருந்து செயற்படுத்துவார்.புகையிரத அதிபரால் இவை தன்னிச்சை யாக நிறுத்தவோ பூட்டவோ முடியாததாகும். உதாரணமாக யாழ்ப்பாணம் ஏ-9 வீதியிலும் ஆரியகுளம் சந்திக்கண்மையி லும் அமைந்திருப்பவற்றை கூற லாம். இவை 100 % பாதுகாப் பான கடவைகள். இவை மூடப் பட்டிருக்கும் போது அதன் ஊடாக கடக்க முற்படுவது விபத்துக்கு காரணமாகவும் பாரதூரமான குற்றமாகவும் கருதப்படுகிறது.

**ஒளிச் சமிக்ஞை கட்டமைப்புடனான தானியங்கி ஒலிச்சமிக்ஞை கடவை ( Bell & Light)**

இவை புகையிரதம் வரும் போது தானியங்கி தொழில் நுட் பம் மூலம் தானாகவே ஒளிர்ந்து அபாய ஒலி எழுப்புமாறு கட்ட மைக்கப்பட்டுள்ளது. இவை மின் தொகுதி கட்டமைப்பின் உதவி யோடு மின் சேமிப்புக் கலங்க ளையும் சேர்ந்து இயங்கும்.மின் தடை/ மின் சேமிப்பு கலங்களின் பழுது மற்றும் மழைக் காலங்க ளில் தொழில்நுட்பக் கோளா றினால் புகையிரதம் வராத போதும் ஒளிர்ந்து ஒலியெழுப்பு வதுடன்; புகையிரதம் வரும் போது தொழிற்படாமலும் போக லாம். மேலும் கனரக வாகனங் களின் எஞ்சின் அதிர்வுகளாலும் இத் தொகுதியின் செயற்பாட்டில் கோளாறுகள் ஏற்படலாமென சந் தேகிக்கப்படுகிறது. உதாரணமாக சாவகச்சேரி, சங்கத்தானை பகு தியில் இந்துக் கல்லூரிக்கு முன் னாலமைந்த கடவையை குறிப் பிடலாம்.மேலும் பல விபத்துக்கள் இப் பகுதியில் ஏற்பட்டமை குறிப் பிடத்தக்கது. பிரதேச சபையின தும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் இவற்றிற்கு அண் மையில் வேகத்தடைகளை ஏற் படுத்தல் விபத்துக்களை இழி வளவாக்குவதற்கான சிறந்த வழிமுறையாகும்.

**மூங்கில் கடவை (Bumboo gate)**

இலங்கையில் பெரும்பா லான கடவைகள் மூங்கில் கட வைகளாக உள்ளன. பொலிஸ் நிலையங்களால் கட்டுப்படுத்தப் படும் இவை குறித்த கடவைக்கு அருகில் வசிக்கும் பொது மக்கள் இருவர்/ மூவரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும்.இவை ஒப்பந்த அடிப் படையில் குறைந்தளவு ஊதியத் துடன் வேலை செய்வதால் கவ னக்குறைவால் அதிக விபத்து க்கள் ஏற்படுகின்றன. புகையிரதம் காலதாமதம்,இவர்களிடையில் சரியான தொடர்பாடல் இன்மை,. விசேட சேவைகள் இடம் பெறுதல், நண்பர்கள், குடும்ப உறுப்பினர் களிடம் பொறுப்புக்களை விட்டுச் செல்லுதல் போன்ற காரணங் களால் இக் கடவையில் விபத்துக் கள் ஏற்படுகின்றன.

இவ்வற்றைவிட சில இடங்களில் மக்கள் தாமாகவே கடவையை ஏற்படுத்தி கடப்பதை வழக்கமா க்கி கொண்டிருக்கின்றனர். இது சட்டத்திற்கு முரணானது மற்றும் பாரதூரமான குற்றமுமாகும். எனவே எமது பாதுகாப்பு எமது கைகளிலேயே என்ற விழிப்பு ணர்வோடு பொது மக்களும் சார திகளும் செயற்பட்டால் மட்டுமே விபத்துக்களற்ற பயணத்தை தொடர முடியும்.

கே.கௌசிகன்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1804

Search for people, places and things

### கமலி

அப்பிளில் தொடங்குகிறது ஆங்கிலம்...
தமிழோ அம்மாவில்.. உணவில்
தொடங்குகிறது ஆங்கிலம் உணர்வில்
தொடங்குகிறது எம் தமிழ்



### முரளி

கலங்கிய நீரும் குழம்பிய மனமும் ஒருநாள்
தெளிந்தே தீரும்... கவலை வேண்டாம்
இதுவும் கடந்து போகும்



### அனிருத்

ஒரு கணவனின் அற்புதமான காதல் வரிகள்...
நாளடைவில் என் குழந்தைகூட என் தயவு
இல்லாமல் நடக்கப் பழகிவிட்டது... எனினும்
என் மனைவி இன்னும் என் கைகோர்த்து
நடக்கவே விரும்புகிறாள்



### விஷ்ணு

குப்பைகள் இல்லாத ஒரே இடம்
குழந்தைகளின் மனது



### யுகேஸ்

அதிகாலை நீ நினைத்த நேரத்தில் எழுந்து
விட்டாலே தோல்விகள் உன்னை விட்டு
ஒதுங்கிக் கொள்ளும்



### நிரோஷா

அண்ணனோடு பிறக்காத எல்லாப்
பெண்களுக்கும் ஒரு ஏக்கம் உண்டு...
எந்த ஆணாவது தன்னை தங்கச்சி என்று
அழைக்கமாட்டானா என்ற ஏக்கம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### ஐ.தே.கவுக்கு இனி ஆதரவில்லை

# மைத்திரி களமிறங்காவிட்டால் கோத்தாவை சு.க. ஆதரிக்கும்

## சாந்த பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன களமிறங்காவிட்டால் எமது ஆதரவை கோத்தபாய ராஜபக்ஷவிற்கே வழங்கத் தீர்மானம் எடுத்துள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கும் எந்த நோக்கமும் எமக்கில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் குறித்த நிலைப்பாட்டை வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு கூடி ஜனாதிபதித் தேர்தல் குறித்து தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அத்துடன் கட்சியின் உறுப்பினர்கள், ஆளுநர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என அனைவரும் பொது இணக்கப்பாட்டுக்கு வரும் தீர்மானம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். ஆகவே அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்னுமொரு தடவை களமிறக்க முடியும். அதற்கான கோரிக்கையை நாம் முன்வைத்தோம். ஆனால் அதற்கான பதில் இன்னமும் ஜனாதிபதியிடத்தில் இருந்து வரவில்லை. ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம்முறை களமிறங்காது போனால் நாம் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.

எமது மாற்று நடவடிக்கையாக கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்க முடியும். அதில் எந்தச் சிக்கலும் இல்லை. அவரது தேர்தல் வெற்றிக்காக எம்மால் செயற்பட முடியும். அதுவே எமது தீர்மானமாக இருக்குமே தவிர மீண்டும் ஒருமுறை ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் எந்த நிலைப்பாடும் எம்மிடத்தில் இல்லை.



இன்று நாட்டு மக்கள் அனைவரும் மாற்று ஆட்சியொன்றை கேட்டு நிற்கின்றனர். ஆகவே அவர்களுக்கு ஏற்ற அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை நாமும் முன்னெடுத்து வருகின்றோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இன்று வேறு கட்சிகளாக தெரிந்தாலும் இரு கட்சிகளின் உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து செயற்பட்ட நபர்கள். ஆகவே மீண்டும் எம்மால் ஒன்றுசேர முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெரமுனவின் வெற்றிக்கு சு.க. உறுப்பினர்கள் நிச்சயம் ஆதரவு வழங்குவார்கள் - செஹான்



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் நிச்சயம் ஆதரவு வழங்குவார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் செயற்படுவோம் என்று சுதந்திரக் கட்சியினர் பேச்சளவில் மாத்திரம் குறிப்பிட்டால் போதாது செயலிலும் காட்ட வேண்டும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டே பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கினர் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஆளும் தரப்பில் அவரைத் தவிர அறிந்தவர் பிறிதொருவர் கிடையாது.

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் எதிரணியில் பிளவை ஏற்படுத்தவே ஆளும் தரப்பினர் முயற்சித்தார்கள். ஆனால் அவர்களின் நோக்கம் தற்போது தோல்வியடைந்துள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே ஜனாதிபதி வேட்பாளர் என்பதை ஆரம்பத்தில் இருந்து குறிப்பிட்டோம். கட்சி உறுப்பினர்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்பளித்தே பொதுஜன பெரமுனவின் தலைவர் உரிய தீர்மானத்தை கட்சியின் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

இன்று தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் தரப்பினரையே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

நாட்டு மக்கள் மீது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வித அக்கறையும் கிடையாது. ஒரு விடயத்தை இலக்காகக் கொண்டு ஒரு ஜனாதிபதி வேட்பாளரைக் களமிறக்குவதில் பாரிய போட்டிகளும், முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்படும் நெருக்கடிகள் இறுதியில் நாட்டு மக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும். இதுவே கடந்த நான்கு வருட காலமாக நிலவியது.

இந்நிலைமை தொடர இனியும் இடமளிக்க முடியாது. பொதுஜன பெரமுனவுடன் நிச்சயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் இணைவார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் செயற்படுகின்றோம் என பேச்சளவில் மாத்திரம் குறிப்பிட்டால் போதாது. செயலிலும் காட்ட வேண்டும். எமது வெற்றிக்கு நிச்சயம் சுதந்திரக்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(வெலிகந்த)

வெலிகந்த, நாமல்கம பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் இந்த நபர் காட்டு யானை தாக்குதலுக்கு ள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த நபர் வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்தார்.

நாமல்கம பிரதேசத்தைச் சேர்ந்த பி.பெரேரா என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (இ-7)

## புதிய உயர்ஸ்தானிகராக சரா ஹுல்ரன் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய உயர்ஸ்தானிகராக சரா ஹுல்ரன் நியமிக்கப்பட்டார்.

உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் இடமாற்றம் பெற்று சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே சரா ஹுல்ரன் நியமிக்கப்பட்டார்.

இவருக்கான நியமனம் கடந்த ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டது.

இவர் எதிர்வரும் சில தினங்களில் தனது பதவியை பொறுப்பேற்றுக் கொள்வார்.

ஹுல்ரன் அம்மையார் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் துணை இயக்குநராக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 'தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தலில் குதிக்க நான் தயார்'

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு தானும் தயாரென தெரிவித்த சிவில் செயற்பாட்டாளரான சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு, அந்தத் தேர்தல் வெறும் தேர்தல் அல்ல. நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் முழு நாட்டின் முறைமையையும் மாற்றக்கூடிய தேர்தலாகும் என்றும் தெரிவித்தார்.


நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் ஜனாதிபதித் தேர்தல் என்பதால், புதிய சிந்தனைகள், எண்ணங்கள் கருத்துக்களுடன் தேர்தலில் களமிறங்குவேன் என்றும், அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை இன்னும் 21 நாட்களில் விடுவேன் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 200 | 300 |
| தக்காளி | 150 | 140 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 120 | 110 | 120 |
| கோவா | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 100 | 140 | 120 | 160 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 |
| புடோல் | 50 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 120 | 120 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 140 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 50 | 120 |
| பயற்றங்காய் | 60 | 60 | 50 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 140 | 190 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 70 | 80 |
| போஞ்சி | 120 | 180 | 100 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 50 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 160 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 140 | 160 | 120 | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 70 | 60 | 130 | 60 |

# சிறுவர் அரங்கம்

## வளர்ப்புத் தந்தை வால்மீகி



மக்களுக்கு உரிய நீதியே மன்னருக்கும் பொருந்தும் என்ற கருத்தை நிலைநாட்ட, ஸ்ரீராமர் சீதையைக் காட்டிற்கு அனுப்பினார்.

அப்போது கர்ப்பிணியாக இருந்த சீதாபிராட்டி, வால்மீகி முனிவர் ஆசிரமத்தில் லவன் என்ற மகனைப் பெற்றாள். ஆசிரமத்தைச் சேர்ந்த மற்றப் பெண்களைப் போலவே சீதையும் ஆசிரமப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். ஒருநாள், வால்மீகி முனிவர் தியானத்தில் ஆழ்ந்திருந்த நேரத்தில் சீதை தண்ணீர் கொணரச் சென்றாள். குழந்தை லவனையும் சீதை தன்னுடன் எடுத்துச் சென்றாள். வால்மீகி தியானத்திலிருந்து விழித்து எழுந்தபொழுது, குழந்தையைக் காணாது திடுக்கிட்டார்.

• ஆசிரமவாசிகளும் துணுக்குற்றனர். சீதை திரும்புவதற்குள் வால்மீகி, தன்னுடைய தவத்தின் ஆற்றலால், ஒரு தர்ப்பைத்துண்டை லவனைப் போன்ற ஒரு குழந்தையாகச் செய்தார்! சீதை ஆசிரமம் திரும்பினாள்! அவள் கையில் குழந்தை லவன் இருந்தான்! அவனைப் போன்ற மற்றொரு குழந்தை இருந்ததைக் கண்டாள்! நடந்ததை வால்மீகி முனிவர் விளக்கியுரைத்தார். 'குசம்' என்ற சொல் தர்ப்பைப் புல்லைக் குறிக்கும். தர்ப்பைப் புல்லிலிருந்து தோன்றிய குழந்தைக்கு, 'குசன்' என்று பெயரிட்டார் வால்மீகி. லவனும் குசனும் ஒருதாய் மக்களாகவே ஆசிரமத்தில் வளர்ந்தனர்.

வசிஷ்டர் ஆசிரமத்தில் இராமனும் லட்சுமனனும் சகல கலைகளையும் கற்றனர் அல்லவா? அதுபோல், வால்மீகியின் ஆசிரமத்தில் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்த லவனும் குசனும் இராமரின் அசுவமேதக் குதிரையை அடக்கிப் பிடித்தனர்! பின்னர், இராமரின் அசுவமேத வேள்விச் சாலையிலேயே இராம கதையைப் பாடி அரங்கேற்றினர் என்பது இராமாயண உத்தர காண்டம் உரைக்கும் செய்தியாகும். "இரு மன்னர் பெற்றேனோ வால்மீகரைப் போலே?" என்று இதனைத் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை குறிப்பிட்டார். வால்மீகி முனிவர் இரண்டு மன்னர்களை, அதாவது கோசல நாட்டு இளவரசர்களான லவ-குசர்களை வளர்த்த பெருமைக்குரியவர் என்பது உள்ளீடு.

### இருமாலை ஈந்தவர்

சோழ நாட்டில் பூதங்குடி என்ற தலத்திற்கு அருகில் உள்ள மண்டங்குடி என்ற ஊரில் மார்கழி மாதம், கேட்டை நட்சத்திரத்தில் அவதரித்தார் தொண்டரடிப் பொடியாழ்வார். பெற்றோர் அவருக்கு விப்ரநாராயணர் என்று பெயர் சூட்டினர். விப்ரநாராயணர் திருவரங்கப் பெருமாளிடம் தனி ஈடுபாடு கொண்டார். அங்கு தங்கி, பெரியாழ்வாரைப் போல் மலர் மாலை சமர்ப்பிக்கும் தொண்டு செய்து வந்தார்.

விப்ரநாராயணரின் நந்தவனத்திற்கு வந்த தேவதேவி என்ற நடனமாது அவரிடம் மையல் கொண்டாள். பெருமுயற்சிக்குப் பிறகு தேவதேவி விப்ரநாராயணரை மையலில் சிக்க வைத்தாள். பிராட்டியின் வேண்டுகோளின்படி, உரிய நேரத்தில் நிகழ்த்திய திருவிளையாடல் வழியே பெருமாள் விப்ரநாராயணரை மீண்டும் தன்பால் ஈர்த்தார். விப்ர நாராயணர் மாதர் மையலால் மாதவனை மறந்த குற்றத்தை உணர்ந்து வருந்தினார்.

அக்குற்றத்திற்குப் பரிகாரம் யாதென்று சான்றோர்களிடம் வினவினார், விப்ரநாராயணர். திருமாலடியார்களின் பாதங்கழுவிய புனித நீரே அவருக்கு உயர்வளிக்கும் என்றனர். அவ்வாறே செய்த விப்ரநாராயணர் தொண்டரடிப் பொடியாழ்வாராக உயர்ந்தார். திருமாலை, திருப்பள்ளியெழுச்சி ஆகிய பிரபந்தங்களை இயற்றினார்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானுக்குப் பள்ளியெழுச்சி பாடினார். தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கனுக்குப் பள்ளியெழுச்சி பாடினார். தில்லைக் கூத்தனின் இனிய தரிசனம் கிடைக்கப் பெற்றால் மனிதப் பிறவியும் பயனுள்ளதே என்றார் திருநாவுக்கரசர்.

அரங்கனை, 'அச்சுதா! அமரர் ஏறே!' என்று அழைத்து, 'அச்சுவை கிடைக்கப் பெற்றால் இந்திரலோகம் ஆளும் அச்சுவையையும் வேண்டேன்' என்றார், தொண்டரடிப் பொடியாழ்வார்.

'இருமாலை ஈந்தேனோ தொண்டரடிப் பொடியார் போலே?' என்று தொண்டரடிப் பொடியாழ்வாரின் மலர் மாலைத்தொண்டை நினைவு கூர்ந்தார், திருக்கோளூர்ப் பெண்பிள்ளை. தொண்டரடிப் பொடியாழ்வார், திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்தார். திருத்துழாய் (துளசி) மற்றும் நறுமண மலர்களைப் பறித்துத் திருமாலுக்கு மாலைகள் கட்டிச் சமர்ப்பித்தார்.

'இருமாலை' என்ற சொல் மூன்று விதமாகப் பொருள் தருகிறது:

1. அவர் பெருமாளுக்குப் பூமாலை, பாமாலை என்ற இரண்டு வகையான மாலைகளை ஈந்தார்.
2. துழாய் மாலை, மற்ற மலர் மாலைகள் என்ற இரண்டு வகையான மாலைகளைப் பெருமாளுக்குச் சமர்ப்பித்தார்.
3. திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற இரண்டு பிரபந்தங்களை இயற்றிப் பெருமாளுக்குப் பாமாலைத் தொண்டு செய்தார்.

திருக்கோளூர்ப் பெண்பிள்ளையின் சிறிய சொற்றொடர்களில் அரிய இலக்கிய நயமும் கருத்தாழமும் பொதிந்துள்ளதைக் காண முடிகிறது, அல்லவா?

## சிந்தனைத்துளிகள்

• நமக்கு நெருக்கமானோர் நம்முடன் பேசாதபோது ஏற்படும் வலியைவிட, அவர்கள் மற்றவருடன் நெருக்கமாக பேசும்போது ஏற்படும் வலி அதிகம்.

• கஷ்டப்படுகிறவன் கிட்ட சிரிப்பு இருக்காது, சிரிக்கிறவன் கிட்ட கஷ்டம் இருக்காது, ஆனால் கஷ்டத்திலும் சிரிக்கிறவன்கிட்ட தோல்வி இருக்காது.

• சந்தோசத்தைத்தான் நம்ம சுத்தி இருக்கிற எல்லாருகிட்டயும் பகிர்ந்துக்கணும். கஷ்டம்னு வந்தா தனியா நின்னு ஜெயிக்கிறவன் தான் மனுஷன்.

• வாழ்க்கையில் ரெண்டு விடயத்தை எப்பவும் மறக்கக் கூடாது. விரும்பி எதுவந்தாலும் **"TAKE CARE"**, விலகி எதுபோனாலும் **"DON'T, CARE"**.

• இன்பத்தை **"INBOX"** இல் வை, கவலையை **"OUT BOX"** இல் வை, புன்னகையை **"SENT"** பண்ணு, கோபத்தை **"DELETE"** பண்ணு, மனதை **"VIBRATE"** செய்து பார், வாழ்க்கை தானா **"RINGTONE"** ஆக மாறும்.

## விடுகதைகளும் விடைகளும்

• உதைக்குப்பறப்பவனை துரத்துவார்கள் சிலர், அதை ரசிப்பார்கள் பலர். அவன் யார்?

**கால்பந்து விளையாட்டு**

• புள்ளிக்குச் சொந்தக்காரன், துள்ளி ஓடுவதில் கெட்டிக்காரன். அவன் யார்?

**மான்**

• ஒலிப்பான், ஒலியை நிறுத்தினால் தகவல் கொடுப்பான். அது என்ன?

**டெலிபோன்**

## பொது அறிவு

• சாலைச் சந்திப்பில் குறியீடாக பச்சை விளக்கு எரிந்தால் என்ன செய்ய வேண்டும்?

**சாலையைக் கடக்க வேண்டும்**

• காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது?

**சீனா**

• உமியிலிருந்து தயாரிக்கப்படும் பொருள் எது?

**கம்பியூட்டர் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சிலிக்கான்**

• ஆண்டர்சன் கூறிய நான்காவது அறிவு சார் நிலை?

**பயன்படுத்துதல்**

• ஜீன்ஸ்துணி யாரால், எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?

**லீவைஸ்ட்ராஸ், 1848**

• காவிரி நதி எந்த மாநிலத்தில் உற்பத்தி ஆகிறது?

**கர்நாடகா**

உயிர் போகும் நிலை வந்தாலும் தைரியத்தை கைவிடாதே. -சுவாமி விவேகானந்தர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கொலைகாரர்களுக்கு எதிராக பிரதமர் எடுத்த நடவடிக்கை என்ன?

கொலைக் கலாசாரம் மீண்டும் தலைதூக்குவதற்கு இடம் தரப் போகிறீர்களா எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்துக் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கேள்வி கொலைகள் நடந்துள்ளன என்பதை அவர் ஏற்றுள்ளார் என்று பொருள்படும்.

இங்கு நாம் கேட்பதெல்லாம் கொலை செய்தவர்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு எடுத்த சட்ட நடவடிக்கை என்ன என்பதுதான்.

கொலைக் கலாசாரம் மீண்டும் ஏற்பட அனுமதிக்கப் போகிறீர்களா? என்று இந்த நாட்டின் பிரதமர் கேட்கிறார் எனில், கொலை செய்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தாதது ஏன் என்று அவரிடம் மக்கள் கேள்வி கேட்பதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

கொலையாளிகளைச் சட்டத்தின் முன்நிறுத்தி உரிய தண்டனையை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்திருந்தால், கொலைக் கலாசாரத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு உடந்தையாக இருக்கப் போகிறீர்களா? என்று மக்களைப் பார்த்து கேள்வி எழுப்புகின்ற தேவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டிருக்காது.

அதிலும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற பிரதமர்; கொலைக் கலாசாரம் என்று குறிப்பிடும்போது கொலை செய்தவர்கள் யார்? அவர்கள் யாரைக் கொலை செய்தனர் என்ற விபரங்களையெல்லாம் அவர் அறிந்துள்ளார் என்றே கருத வேண்டும்.

ஆக, கொலையாளிகள் யார் என்று தெரிந்திருந்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனும்போது இந்த அரசாங்கம் கொலையாளிகளைப் பாதுகாத்துள்ளது என்ற குற்றச்சாட்டு எழுவதில் நியாயம் இருக்கவே செய்யும்.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தேர்தலை மையப்படுத்தி சில விடயங்களை முன்வைக்கிறார் என்பதே உண்மை.

இந்த உண்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. ஆகையால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க; கொலையாளிகளை, கொலைக்கலாசாரத்தை ஏற்படுத்தியவர்களை உடன் கைது செய்து அவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கையை கூட்டமைப்பு விடுக்க வேண்டும்.

இல்லையேல் எல்லாம் அரசியல் பதவிக்கான செற்றப் என்று மட்டுமே கூறமுடியும்.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தமானது தமிழின அழிப்பு என்று சர்வதேச சமூகம் கூறியிருக்கின்ற நிலையில்,

யுத்தம் முடிந்தவுடன் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை எதுவும் தெரியாமல் இருக்கையில்,

சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சர்வதேச மட்டத்தில் எழுந்திருக்கும்போது, சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியவர்கள் இப்போது கொலைக் கலாசாரம் பற்றிப் பேசுகின்றனர் என்றால் எல்லாம் ஏமாற்று நாடகமும் நடிப்பும் என்பதை எம் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் நம் விருப்பம்.

# புற்றுநோய் மருந்துப்பொருள் கொள்வனவு பத்திரத்தின் கையொப்பத்தில் சந்தேகம்!

## குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு

(கொழும்பு)

புற்றுநோய் மருந்துக்கான கொள்வனவு பதிவு ஆவணத்தில் காணப்படும் கையொப்பம் தொடர்பில் பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கூறியும அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடொன்றை அளித்துள்ளதாக அந்தச் சங்கத்தின செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புற்றுநோய்க்கான மருந்துப் பொருட்களின் கொள்வனவு பதிவு ஆவணத்தில் காணப்படும் கையெழுத்து தொடர்பில் பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

விசேட புற்றுநோய் நிபுணர்களால் நிராகரிக்கப்பட்ட மருந்து பொருட்களை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவும் அவருடன் சேர்ந்தவர்களும் நாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்த வகையில் அந்த மருந்துப் பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான அனுமதி கடந்த 2016. 02.19 வழங்கப்பட்டது.

இருப்பினும் அண்மையில பாராளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதத்தின் போது அந்த மருந்துப்பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்க தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் லால் ஜெயகொடி பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளதாக கூறியிருந்தார்.

இருப்பினும் , அந்த பத்திரத்தில் உள்ளது பேராசிரியர் லால் ஜெயக்கொடியின் கையொப்பம் இல்லை என்று பலதரப்பினரும் எமது கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

ஆகவே, அது தொடர் பில நாம் ஆராய்ந்திருந்தோம். அதற்கமைய பேராசிரியர் லால் ஜெயக்கொடியின் கையெழுத்துடன், வெளியிடப்பட்ட 2015 ஒகஸ்ட் 6 ஆம் திகதி கடிதம் எங்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

அந்த கடிதத்தில் உள்ள கையொப்பத்தை அந்த ஆவணத்துடன். ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இரண்டிலும் கையொப்பங்களில் வேறுபாடுகள் காணப்பட்டன.

எனவே , புற்றுநோய்க்கான தடுப்பு ஊசி கொள்வனவின் போது மறைமுகமான முறையில் கையொப்பம் இடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டது. தரம் தொடர்பில் பிரச்சினை இருப்பதாக விசேட புற்றுநோய் நிபுணர்கள் குறிப்பிட்ட போதிலும் நாட்டிற்குள் பாவனையில் உள்ள நிலையில் இந்த மருந்துப் பொருள் கொள்வனவு தொடர்பிலான கையொப்பத்திலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (இ-7)

## பால்மாக்களில் மிருகக் கொழுப்பில்லை; சபாநாயகரிடம் ஆய்வறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களில் மிருகக் கொழுப்பு கலப்படம் இல்லை என உறுதப்படுத்தப்பட்ட வெளிநாட்டு ஆய்வறிக்கை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் தினங்களில் சபாநாயகர் குறித்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பார் எனவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இலங்கையின் சந்தைகளில் இருந்து பால்மாக்களின் மாதிரிகளை பெற்று ஜேர்மனில் பரிசோதனை செய்யப்பட்டது. ஜேர்மனில் மேற்கொண்ட ஆய்வறிக்கையே தற்போது சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## 25 மில்லியன் ரூபாய் செலவில் யாழ். பண்ணையில் கிராம சக்திச் சந்தை அங்கஜன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம சக்திப் பயனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு யாழ் பண்ணையில் 25 மில்லியன் ரூபாய் செலவில் கிராம சக்திச் சந்தை உருவாக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நாட்டுக்காக ஒன்றிணைவோம் ஜனாதிபதி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கையில் முதல் முறையாக கிராமசக்திச்சந்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் யாழ் மாவட்டச் செயலகத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களில் கிராம சக்தித் திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை குறித்த சந்தையில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடும் செய்து கொடுக்கப்படும்.

எனவேதான் யாழ் மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் இடம்பெறுகின்ற குறித்த திட்டத்தை இம்மாத இறுதியில் யாழ் வரும் ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைப்பார் என அங்கஜன் இராமநாதன் மேலும் தெரிவித்தார்.(ம-3,10)

## திருக்குறள் முத்திரை வெளியீடு -ஆளுநர் சுரேன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

உலகில் எங்குமில்லாதளவுக்கு யாழில் முதல் முறையாக திருக்குறளுக்கான முத்திரை வெளியிடும் நிகழ்வு இடம் பெறவுள்ளது என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நாட்டுக்காய் ஒன் றிணைவோம் ஜனாதிபதி செயற்திட்டக் கலந்துரையாடலில் பங்குப ற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இம்மாதம் 23 - 30 ஆம் திகதி வரை வடமாகாணத்தில் திருவள்ளுவரையும் அவர் எழுதிய திருக்குறளையும் கௌரவிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக திருவள்ளுவர் எழுதிய உலகப் பொதுமறையான திருக்குறளை கௌரவிக்கும் பொருட்டு குறித்த முத்திரை வெளியிடப்படவுள்ளதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

(ம-3,10)

## ரணிலின் ஐந்து நிமிட நிகழ்வுக்காக ஐந்து மணித்தியாலங்கள் காத்திருந்த பொதுமக்கள்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐந்து நிமிட நிகழ்விற்காக ஐந்து மணித்தியாலங்கள் பொதுமக்கள் காக்க வைக்கப்பட்டனர்.

உடுப்பிட்டி சந்தணத்தரை பகுதியில் அமைக்கப்பட்ட 15 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காக காலை 9.00 மணிக்கே அங்கு அமைக்கப்பட்ட இடத்தில் பொதுமக்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க பிற்பகல் 1.50 மணியளவில் அங்கு வருகை தந்தார்.


வந்தவரை ஆராத்தி எடுத்ததுடன் நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்தார்.

அங்குள்ள வீடு ஒன்றை திறந்து வைத்து உறுதிப் பத்திரத்தையும் கையளித்து விடடு மேடையில் ஒரு நிமிடம் அமர்ந்திருந்தார். அதனைத் தொடர்ந்து இருவருக்கு உறுதிப் பத்திரம் வழங்கி விட்டு 2.00 மணிக்கு புறப்பட்டுச் சென்றார்.

ரணிலின் ஐந்து நிமிட நிகழ்விற்காக ஐந்து மணித்தியாலங்கள் பொதுமக்கள் காக்க வைக்கப்பட்டனர்.

அவர்களிற்கு ஒரு பணிஸ் மட்டும் வழங்கப்பட்டதாக அங்கிருந்தவர்கள் கூறினர். (ம-60)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மகத்தான செயல்களைச் செய்யவே கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். அவற்றை செய்து முடிக்க உறுதியெடு.
- இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே. என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதே.
- நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உன் மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்து விடு.
- உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.
- சரியான வழியில் செலுத்தப்பட்ட மனம் ஒருவனைக் காப்பதோடு விடுதலை பெறவும் செய்யும்

# கோண்டாவில் இந்து அணியை வென்று சம்பியனாகியது சங்கானை உதயதாரகை

கோண்டாவில் ஐக்கியம் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு எட்டுப்பேர் 6 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று சங்கானை உதயதாரகை அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இவ் இறுதிப் போட்டியில் சங்கானை உதய தாரகை அணியினை எதிர்த்து கோண்டாவில் இந்து விளையாட்டுக் கழக அணி மோதியது.

போட்டியில் முதல் துடுப்பெடுத்தாடிய கோண்டாவில் இந்து 6 ஓவர்கள் நிறைவில் 40 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

41 ஓட்டங்கள் வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய சங்கானை உதய தாரகை அணி 4.4 ஓவர்கள் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. (க)



# குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி

கைதடி மத்தி குமரநகர் சன சமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு குமரநகர் விளை யாட்டுக்கழகம் நடத்தும் யாழ் மாவட்ட ரீதியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு நாளை 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு குமரநகர் விளை யாட்டு மைதானத்தில் குமரநகர் விளையாட்டுக்கழகத் தலைவர் சி.பிரகாஸ் தலைமையில் நடை பெறும்.

சுதுமலை நாவலர் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மோத வுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விரு ந்தினராக யாழ் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறீதரன்,சிறப்பு விரு ந்தினர்களாக சாவகச்சேரி பிர தேச சபைத் தவிசாளர். க.வாம தேவன், வடக்கு மாகாண முன் னாள் உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.கே.எம்.ஏ.கே. கோனாற, கௌரவ விருந்தினர் களாக சாவகச்சேரி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் சு.கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட தாச்சி சங்கத் தலைவர் தெ.சுகிர் தன, கைதடி மத்தி கிராம அலு வலர் மு.சிவகுமாரசர்மா,சமுர் த்தி உத்தி யோகத்தர் க.அன்ரன் தேவகுமார், சனசமூக நிலை யங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் அ.செந்தூரன் ஆகியோர்கலந்து கொள்வர். (க-14)

# அரியாலை சரஸ்வதியின் சதுரங்கப் போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு KNBUILDMASTERS அனுசரணையில் மாபெரும் சதுரங்கப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

6,8,10மற்றும் 12 வயதிற்குட்பட்ட மற்றும் திறந்த போட்டிகள் ஆண்,பெண் இருபாலருக்கும் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்புபவர்கள் 077 846 9173, 077 846 0089 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# நொதேன் எலைட் அம்பாறை அவேஞ்சர்ஸ் போட்டி சமநிலையில்

வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நடைபெற்ற 19வது ஆட்டத்தில் நொதேன் எலைட் அணியை எதிர்த்து அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி மோதி யது.

ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் 02:00 என்ற கோல் கணக்கில் நொதேன் எலைட் அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற இர ண்டாம் பாதி ஆட்டத்தில் அம் பாறை அவேஞ்சர்ஸ் அணி இரு கோல்களைப் பெற்றுக்கொள்ள ஆட்ட நேர முடிவில் இரு அணி களும் தலா இரு கோல்களை பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் நிறைவு பெற்றது.

நொதேன் எலைட் அணி சார்பாக பிரசாந் இரு கோல் களையும் மற்றும் அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி சார்பாக மஜித், ஹனன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக்கொடு த்தனர். (க)

# மூன்றாவது வெற்றியைப் பெற்றது ரில்கோ கொங்கியூரஸ் அணி



வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நடைபெற்ற 21வது ஆட்டத்தில் ரில்கோ கொங கியூரஸ் அணியை எதிர்த்து மட்டு நகர் சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதி ஆட் டத்தில் 02:01 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கி யூரஸ் அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் ஒரு கோலை ரில்கோ கொங்கியூரஸ் அணி பெற்றுக் கொள்ள ஆட்ட நேர முடிவில் 03:01 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி வெற்றி பெற்றது. ரில்கோ கொங்கி யூரஸ் அணி சார்பாக இவான்ஸ் 02, ஹரீஸ் 01 கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லையா சதீஸ்குமார் ஞாபகா ர்த்த மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் அணி கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் ந. சுதேஸ்குமார் 077 617 6988 எனும் இலக்கத்து டன் தொடர்பு கொண்டு பதிவு களை மேற்கொள்ள முடியும்.(க)

# யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகத்தின் 23 ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி இன்று 17 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடை பெறவுள்ள போட்டிகள் யாவும் மாலை 6.30 தொடக்கம் இரவு 8.30 வரை மின்னொளியில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# இறுதிக்குள் நுழைந்தது சுதுமலை சலஞ்சர்ஸ்



அரியாலை சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் அணிக்கு 9 பேர் 8 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் இடம் பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று முதல் அணியாக இறுதி போட்டிக்குள் நுழை ந்தது சுதுமலை சலஞ்சர்ஸ் விளை யாட்டுக்கழக அணி. முதலாவது போட்டி யில் அரியாலை சனசமூக நிலைய அணியை 8 இலக்குகளாலும் இரண்டா வது போட்டியில் யுனி ஸ்டார் விளை யாட்டுக்கழகத்தை 2 இலக்குகளாலும் வெற்றிபெற்றது.

அரையிறுதிப் போட்டியில் பலம் மிக்க கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தை இறுதிப்பந்தில் 1 இலக்கினால் த்ரில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. (க)

## நாகர்கோவில் சரணாலயத்திற்கான...

வுக்குழு கூட்டம் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது, மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது.

நாகர்கோவில், சுண்டிக்குளம் இயற்கை சரணாலயத்திற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது, வடக்கு ஆளுநர் உணர்ச்சிவசப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கையை கண்டித்தார். அது முறையற்ற விதத்தில் வர்த்தமானியாக பிரசுரிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சுண்டிக்குளம் பறவைகள் சரணாலத்திற்காக வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்ட பிரதேசத்தில் மீனவர்கள் மீன்பிடிக்க, விவசாயம் செய்ய மற்றும் வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்யும் விதமான விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட பிரதமர், வனஜீவராசிகள் திணைக்களம் இதில் கவனமெடுத்து, உடனடியாக அந்த விசேட ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்றும், அதை செய்ய தவறினால் அமைச்சரவை பத்திரம் மூலம் அதை செய்ய நேரிடும் என்றும் எச்சரித்தார். (ம-3)

## ஐஸ் ரக போதை...

தலை மன்னார் கிராமம் கடற்கரை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கடற்படையினர் மேற்கொண்ட சோதனையின் போது ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

தலைமன்னார் கிராமம் கடற்கரை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 1.05 கிலோ கிராம் எடையுள்ள ஒரு கோடி ரூபாய் பெறுமதியான "ஐஸ்" போதைப்பொருள் பொதியினையே கடற்படையினர் மீட்டுள்ளனர்.

வட மத்திய கடற்படை கட்டளை அதிகாரியின் சிறப்பு சோதனையின் போது குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட போதைப்பொருள் தலை மன்னார் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-285,286)

## பலாலியிலிருந்து...

வரத்துத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள், பொறியியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ம-3)


அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 702 வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.08.16
விசேட இலக்கம் 6294
வெற்றி இலக்கங்கள் 12 19 21 29
ஆங்கில எழுத்து Y
தொலைபேசி: 0112 333 546-47

27 28 39 68 I
31723
சீட்டிழுப்பு வாரம் 482
வர்ணம் பச்சை
திகதி 16/08/2019 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 136,193,243/=
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
திகதி 16/08/2019 வெற்றி வாரம் 2588 வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 12 22 25 57 விருச்சிகம்
ரூ.500 பரிசுக்காக 6008
ரூ.100 பரிசுக்காக 373
பம்பர் சான்ஸ் விசேட இல.
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 271
சீட்டிழுப்பு திகதி 16/08/2019 சிவப்பு
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 24 55 62
விதி எண் 06
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk


## ஆட்டோவில் சென்ற...

இருந்து காங்கேசன்துறை வீதியால் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸஸில் சென்றவரிடம் நாச்சிமார் கோயில் பகுதியை அண்மித்த நிலையில் குறித்த மூன்று பெண்களால் பெண் ஒருவரின் நகை களவாடப்பட்டது.

நகை களவாடப்பட்டதை அறிந்து கொண்ட குறித்த பெண் மருதனார்மடப் பகுதியில் குறித்த பஸ்ஸை நிறுத்தி சோதனையிடுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க பஸ்ஸில் சென்றவர்களிடம் சோதனை இடம்பெற்றது.

இதன் போது விரைவாக இறங்கிய களவாடிய குறித்த மூன்று பெண்களும் அருகில் உள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடத்துக்குச் சென்று யாழ் கச்சேரிக்கு போகவேண்டும் எனக் கூறி முச்சக்கர வண்டியில் பயணித்தனர்.

குறித்த பெண்கள் மீது சந்தேகம் கொண்ட அயல் முச்சக்கரவண்டி ஓட்டுநர் தமது முச்சக்கரவண்டித் தரிப்பிடத் தலைவருக்குத் தெரியப்படுத்தியதன் விளைவாக குறித்த பெண்களை ஏற்றிச் சென்ற சாரதிக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதை அடுத்து சாதுரியமாகச் செயற்பட்ட முச்சக்கரவண்டி சாரதி மீண்டும் அதே இடத்துக்கு குறித்த மூன்று பெண்களையும் கொண்டு வந்தார்.

இதன் விளைவாக குறித்த நகை பிடிபட்டதுடன் உடனடியாக சுன்னாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து குறித்த மூவரும் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-3,10)


கொவிசெத
திகதி 2019.08.16
சீட்டிழுப்பு இலக்கம் 2211
ஆங்கில எழுத்து G
வெல்லப்பட்ட இலக்கங்கள் 22 44 46 67
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/08/16
சீட்டிழுப்பு இலக்கம் 3984
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 4 4 4 1 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-08-16
சீட்டிழுப்பு இலக்கம் 188
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 57 63 64 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/08/16
சீட்டிழுப்பு இலக்கம் 0420
வெற்றி எழுத்து F
சுப்பர் இலக்க 25
வெற்றி இலக்கங்கள் 09 13 18 46


## பலாலி விமான...

தலைமையில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த கலந்துரையாடலிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி தற்போது நடைபெற்று வருகின்றது. விமான நிலையத்துக்கான ஓடுபாதை விஸ்தரிக்கப்படுமாயின் மக்களின் காணிகள் சிலவற்றை சுவீகரிக்க ஆலோசித்து வருவதாக அறிகின்றேன். அதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஓடுபாதை விஸ்தரிக்க வேண்டுமாயின் விமான நிலையத்தின் வடக்கு பக்கமாக உள்ள கடல்பகுதியை நிரவி அதன் ஊடாக ஓடுதளத்தை அமைக்க முடியும் என்றார்.

இதன் போது கருத்து தெரிவித்த பாதுகாப்பு தரப்பினர், விமான நிலைய அபிவிருத்தியின் போது காணிகள் சுவீகரிப்பது தொடர்பில் இப்போது எந்த முயற்சியும் நடைபெறவில்லை.

நீங்கள் சொல்வது போல கடலை நிரவி ஓடுபாதை அமைப்பது தொடர்பாக நாமும் சிவில் விமான போக்குவரத்து துறையினர் போன்ற பல தரப்புக்களுடனும் பேசி ஓர் முடிவுக்கு வரமுடியும் என்றனர். (ம-3)

## யாழில் தனியார்...

குறித்து அமைச்சர் ரிஷாத்.பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இவ்விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழு முஸ்லிம்களை மீள்குடியேற்றத் தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க அங்கீகாரம் வழங்கியது.

இக்கூட்டம் நிறைவடைந்த பின்னர் யாழ். மஹம்மதிய்யா பள்ளிவாசலுக்குச் சென்ற பிரதமர், மீள்குடியமர்ந்த முஸ்லிம்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அடிக்கடி யாழ்.முஸ்லிம்களின் பிரச்சினைகளை என்னிடம் எடுத்துரைப்பார். இம்மக்களின் பூர்வீகம் பற்றியும் எனக்குத் தெரியும். உங்களை நேரில் சந்தித்தும் பல விடயங்களைத் தெரிந்து கொண்டேன். உரிய காணிகள் பெறப்பட்டதும் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். (ம-3)

## குடும்பப் பெண்...

யிருப்பைச் சோர்ந்த 3 பிள்ளைகளின் தாயான அரசரட்ணம் வசந்தமலர் (வயது 77) என்ற குடும்பத் தலைவியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி தீக்காயத்துக்குள்ளாகி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## விடுவிக்கப்படாமல்...

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

நேற்றையதினம் யாழ் செயலகத்தில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான முன்னேற்றக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2019 டிசம்பர் மாதத்துக்குள் வலி வடக்கில் உள்ள தனியார் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்த நிலையில் ஏன் இன்னும் விடுவிக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுநரிடம் கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பில் பதிலளித்த ஆளுநர் இம்மாத இறுதியில் ஜனாதிபதி யாழ் வரும் போது குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்துவேன் எனப் பதில் வழங்கினார். (ம-3,10)

## இலங்கைக்கான...



தானியாவின் தூதுவராக பணியாற்றிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் இடமாற்றம் பெற்று சென்ற நிலையிலேயே புதிய தூதுவராக சரா அம்மையார் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சரா அம்மையார், சில தினங்களில் பதவியை பொறுப்பேற்கவுள்ளார்.

ஹல்ரன் அம்மையார் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் துணை இயக்குநராக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தேசிய தௌஹீத்...

வினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை புறநகர் பகுதியில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். கைதானவர் 16 வயது மதிக்கத்தக்க குருநாகல் ஹெக்குனு கொல்ல பகுதியை சேர்ந்த முஹமட் நௌபர் அப்துல்லா என்பவராவார்.

தீவிரவாதி சஹ்ரானினால் நுவரெலியாவில் நடாத்திச் செல்லப்பட்ட இராணுவ பயிற்சியில் இணைந்து கொண்டு பயிற்சியை மேற்கொண்டிருந்ததாக இவர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தற்கொலை தாக்குதலில் இறந்த சஹ்ரானிற்கு அடுத்த நிலை 2 ஆவது தலைவராக மௌலவி முகமட் நௌபர் அடையாளப் படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே 2 ஆவது தலைவரான மௌலவி முகமட் நௌபரின் மகன் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மக்களின் காணி...

யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே இராணுவ அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பலாலி வீதியின் கிழக்குப் புறமாகவுள்ள மிக வளமான விவசாய நிலங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாக சுட்டிக்காட்டியதுடன் குறித்த காணிகள் விடுவிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் இதனை வலியுறுத்தியதுடன், வல்லை அராலி வீதி மற்றும் மயிலிட்டியில் 3 கிராம சேவகர் பிரிவுகள் தொடர்ந்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாக சுட்டிக்காட்டினார். அத்துடன் இராணுவத்தின் இந்த நடவடிக்கை மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு பாரிய தடையை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி, மேற்படி காணிகளை விடுவிப்பதற்கு 1200 மில்லியன் ரூபாய் நிதியை அரசாங்கத்திடம் கோரியிருந்ததாகத் தெரிவித்ததுடன், அந்த நிதியை அரசாங்கம் தராத நிலையில் காணி விடுவிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-3)

## பிராந்திய அலுவல...

சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் மனோ கணேசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான பிராந்திய அலுவலகங்கள் ஏற்கனவே மாத்தறை, மன்னாரில் திறக்கப்பட்டுள்ளன. தற்போது மூன்றாவதாக யாழிலும் திறக்கப்படவுள்ளது. (ம-3)

**ENGLISH GROUP CLASSES**

**Gr.6 - O/L**

by: P.T.KUMARAN (P.MATHAN)

**NEWTON** GROUP CLASSES

18/18, Wyman Road, Nallur

077 792 3653



கதைக்க, எழுத, வாசிக்க

**சிங்களம்**

சனி ஞாயிறு 4 - 5.30

17.08.2019 முதல்

British College of Higher Studies

15, Stanley Road, Sirambiyady lane,

021 222 4550 / 076 138 0212

(C-7264)


## தெல்லிப்பளைப் பகுதியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவர் நேற்று தெல்லிப்பளை பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பார் மணியம் வீதி, செல்வாபுரம், தெல்லிப்பளையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான திருச்செல்வம் உதயசீலன் (வயது-32) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி கிறிஸ்தோபர் மேற்கொண்டார். (ம-3)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(9853)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூபாய் 100), சில்லறையாகவும் (ரூபாய் 110) பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப்பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)

தொடர்புகளுக்கு :021 222 2567

(C-7268)


# மரண அறிவித்தல்



## சிவப்பிரகாசம் சிவஞானலிங்கம் (கண்ணன்)

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1945.08.26 | 2019.08.12 |

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையையும் திருகோணமலையையும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சிவஞானலிங்கம் கடந்த 12.08.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அற்புதராஜா - சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் (ராணி - தட்டெழுத்து சுருக்கெழுத்து முன்னாள் ஆசிரியை - North Ceylon / IIS) அன்புக் கணவரும் சிவகுகல்யா (டொலி - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 94), ரிஷிகரன் (யா/பரியோவான் கல்லூரி 96), கஜந்தன் (யா/பரியோவான் கல்லூரி 97) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உமாசங்கர், கரோலின், அமலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலாதேவி, காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவலிங்கம், சிவயோகேஸ்வரி, ஸ்ரீநடராஜா (நந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவராஜன், விஜயராஜன், அருள்ராஜன், ஜெயராஜன், தர்ஷினி ஆகியோரின் மைத்துனரும் ஷமி, நிலானி, சௌமியா, ஒலிவியா, பெனிற், மிதுன் (யா/பரியோவான் கல்லூரி தரம் 6), பிரனேஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் (158/1, நாவலர் வீதி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(9926)

158/1. நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்

கஜன் (மகன்) 0766385626


# முல்லைத்தீவு மாவட்டத்தில் முழு பலத்தையும் கொண்ட

# கோபி ஊர்திகள் சுத்திகரிப்பு நிலையம்


# விற்பனைக்கு



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட கோபி ஊர்திகள் சுத்திகரிப்பு நிலையம் விற்பனை செய்யப்பட உள்ளது. எனவே விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**கோபி ஊர்திகள் சுத்திகரிப்பு நிலையம், திருத்தகம்**

**ஒட்டுசுட்டான் வீதி, பத்தாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.**




**கிடைக்கக்கூடிய சேவைகள்**

01 அதி நவீன ஜக் வசதியுடனான சேவீஸ்
02. புதிய 3D தொழில்நுட்பத்துடனான Wheel Alignment பார்த்தல்
03. சகல வாகனங்களுக்குமான ஒயில் பில்ரர் மாற்றுதல்
04. தரம்வாய்ந்த கால்ரெக்ஸ் ஒயில் விற்பனை முகவர்
05. நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ரயர் கடை
06. சகல வாகனங்களுக்குமான வயறிங் வேலைகள்
07. சகல வாகனங்களுக்குமான மெக்கானிக் வேலைகள்
08. சகல வாகனங்களுக்குமான ரிங்கறிங் வேலைகள்
09. சகல வாகனங்களுக்குமான பெயின்ரிங் வேலைகள்
10. சகல வகையான வெல்டிங் வேலைகள்
11. கேலிஸ் கம்பனியின் விவசாய அறுவடைக்கான இயந்திரங்கள் (வெட்டு மெசின், உழவு இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள்) போன்றவற்றுக்கான முல்லை மாவட்ட ஏக முகவர்
12. வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சிற்றுண்டிச்சாலை, ஓய்வறை, மலசலகூடம், குளியலறை ஆகிய வசதிகளும் உண்டு.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரச,அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் மற்றும் முப்படைகளின் வாகனங்கள் திருத்தம் செய்து கொண்டிருக்கின்ற சகல வசதிகளையும் கொண்ட ஒரு நிறுவனம் இது மாத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்



தொடர்புகளுக்கு: **த.நவநீதன் 077 374 8704**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.